Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/724)

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 30 | திங்கட்கிழமை | (13.06.2011) | பக்கங்கள் 16 | ஓசை - 257



சீமானின் சீற்ற அறிக்கை 02



முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதனம் 05



விம்பிள்டன் வெல்லும் முயற்சியில்... 07



அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது 10

# பொதுமக்களின் நண்பனாகிறது பொலிஸ்
# இனி அவர்களிடம் துப்பாக்கிகள் இருக்காது



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் ஆரோக்கிய மான சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இம்முயற்சியின் முதற்கட்டமாக இதுவரை பொலிஸாரின் பாவனையிலிருந்த நவீன துப்பாக்கிகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

சகல பொலிஸ் நிலையங்களிலும் பாவனையிலிருந்த ரி - 56 ரக ரைபிள் துப்பாக்கிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நிலவிய சூழ்நிலையக் கருத்திற் கொண்டே பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து பொலிஸாருக்கு ரி - 56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஆயினும் தற்போதைய நிலையில் அவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லையென்பதால் அவற்றை மீளப்பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸார் பொதுமக்களுடன் மிக நெருக்கமான உறவைக் கட்டியெழுப்பவும், பொதுமக்களுக்கான சிநேகபூர்வ பொலிஸ் சேவையொன்றை உருவாக்கும் நோக்கிலுமே பொலிஸார் வசமுள்ள துப்பாக்கிகளை மீளப்பெற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஆயினும் பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து. ஓரிரண்டு துப்பாக்கிகள் மாத்திரம் சகல பொலிஸ் நிலையங்களிலும் வைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்படும். ஏனையவற்றை பொலிஸ் தலைமையகத்துக்கு ஒப்படைக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் பொதுமக்கள் தொடர்புபடும் கடமைகளுக்குச் செல்லும் பொலிஸாருக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்லவும் அனுமதியில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

## கொக்குவிலில் குடும்பஸ்தர் மின்சாரம் தாக்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

தொலைக்காட்சியை இயக்க முற்பட்ட ஒருவர் நேற்றைய தினம் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். சுகாதாரப் பணிமனையில் பணியாற்றும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வைரமுத்து தயாமோகன் என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

ஈரமான கையுடன் சென்று தொலைக்காட்சியை இயக்க முற்பட்ட போதே மின் தாக்கியதாகக் கூறப்படுகிறது. மேலதிக பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கா)

## ஜனாதிபதி மகிந்த நாளை ரஷ்யாவுக்கு

(கொழும்பு)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை அங்கு பயணமாகிறார்.

சர்வதேச நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதும், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ரஷ்யத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதும்தான் அவரது இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக இருக்கும் என கொழும்பில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வீட்டுடன் தனியாகப் பேச்சுக்களை நடத்தவிருக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்; உமையாள்புரத்தில் சடலம் மீட்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் நேற்றுக்காலை சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஏ9 வீதியின் 40 அடிப் பாலத்தை அண்மித்த இடத்தில் ஆணொருவரின் சடலம் இருப்பதாக அப்பகுதி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக கிராம சேவகர் சகிதம் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸாரினால் மேற்படி சலடமானது கிளிநொச்சிப் பகுதியில் கடமையாற்றிய பொலிஸாரின் சடலம் என்று அடையாளம் காணப்பட்டது.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் தொடர்பு கொண்ட போது இச்சடலம் பியாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லேவெல என்னும் இடத்தைச் சேர்ந்த 41 வயதுடைய ஆனந்த சமரக்கோன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சடலம் உடற்பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவரது மரணம் பற்றிய மேலதிக தகவல் இதுவரை தெரியவரவில்லை என்றும், முதுகுப் பகுதியில் உரசல் காயம காணப்பட்டதாகவும், சிவில் உடையில் காணப்பட்டதாகவும், தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (110)

### சவேந்திர சில்வாவின் நூல் வெளியீடு

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா எழுதியுள்ள “இலங்கை 2600 வருடங்களின் அடையாளம்“ என்ற புத்தகத்தின் வெளியீட்டு வைபவம் கண்டி தலதா மாளிகையில் நடைபெற்றது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## விடைத்தாள் திருத்தும் பணியை புறக்கணிக்க பல்கலை ஆசிரியர்கள் முடிவு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணியிலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் விலகிக் கொள்வர் என்பதை பரீட்சைகள் ஆணையாளருக்கு இவ்வாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதிலிருந்து விலகிக்கொள்ளும் உறுதியான தீர்மானத்தை சங்கத்தின் நிறைவேற் றுக்குழு, கடந்த வெள்ளிக் கிழமை மேற்கொண்டதாக அச் சங்கத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

அரசாங்க அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், போதுமான சம்பள உயர்வு கோரிக்கை தொடர்பாக திருப்திகரமான எந்தத் (15 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா தலையிடாது எனவும் அது இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயம் எனவும் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட தூதுக்குழு தெரிவித்துள்ளது.

- தமிழ் மிரர் 11.06.2011



ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நீடிக்கக் கூடியதுமான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியா தனது முழுப் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கும்.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

- உதயன் 12.06.2011

## ஏன் இப்படிச் சொல்கிறார்கள்...?

# பல்துறை அபிவிருத்தியில் பூநகரி உச்சநிலை அடையும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



(கொழும்பு)

பூநகரி பிரதேசம் சிறந்த வளங்களைக் கொண்டிருக்கும் பூமி எனினும் கடந்தகால தவறான அரசியல் தலைமைகள் காரணமாக இப்பிரதேச வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டது மட்டுமல்லாமல் எல்லாம் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் பல்வேறு புதிய வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று பூநகரி பிரதேச செயலர பிரிவிற்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் அங்கு கருத்து தெரிவிகையில் பூநகரி பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உரிய உதவு தொகைகள் மற்றும் உபகரணங்கள், வீட்டு வசதிகள், மலசலகூட வசதிகள் உட்பட பல்வேறு வசதிகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படவில்லை என்பது எனது அவதானத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ் விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் அனைவரும் எனக்கு உடனடி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். அதன் அடிப்படையில் கூடிய விரைவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அத்துடன வீடுகள், மலசல கூடங்கள், குடிநீர் வசதி போன்றவற்றை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு செய்துள்ளார்.

இன்னமும் திருத்தப்படாதிருக்கும் வீதிகளை கூடிய விரைவில் திருத்தி முடிக்கும்படி அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

அத்துடன் பல்வேறு இடங்களிலுள்ள குளங்கள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாகத் திருத்தப்படுமெனவும் தற்போது ஒரு சில குளங்களின் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காணி தொடர்பிலான பிரச்சினைக்கு கூடிய விரைவில் தீர்வு காணப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததுடன் அதுவரையில் உதவி அரசாங்க அதிபர் உரிய காணிகளின் உரிமையாளர்களை உறுதிப்படுத்துவார் என்றும் இதனடிப்படையில் வீடமைப்பு உதவிகள் வாழ்வாதார உதவிகள் மற்றும் விவசாயத்துறை சார்ந்த உதவிகளை அந்தந்த நிறுவனங்கள் வழங்க முன்வரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.



பாசையூர் புனித அந்தோனியார் ஆலய நற்கருணைப் பெருவிழாவின் பவனி வழிபாடு நேற்று இடம்பெற்றது. (52)

# வடக்கில் கடும் காற்று பயன்தரு மரங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக வீசிவரும் அதிவேகமான காற்றுக் காரணமாகப் பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன.

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் வயல் வெளிகளை அண்டிய பகுதிகளில் உள்ள மரங்கள் இவ்வாறு அதிகளவில் முறிந்து விழுந்துள்ளன. பனை, தென்னை, போன்ற மரங்கள் அதிகமாக முறிந்துள்ளன. சேதமடைந்திருந்த மரங்கள் பெரும்பாலும் முறிந்துள்ளது. இதனால் பொருளாதார இழபபுக்கள் ஏற்பட்டுள்ளது. அண்மையில் நவாலிப் பகுதியில் உள்ள பனை மரங்கள் விழுந்ததில் கட்டிச் சில நாட்களேயான மதில் இடிந்துவிழுந்தமை குறிப்பிடத்தக்கது. (கா)

# முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்பு

(அளவெட்டி)


அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினர் முன்பள்ளி மாணவரின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் ஆங்கில வகுப்பினை நடாத்தவுள்ளனர்.

அளவெட்டி நலன்புரிச் சங்க சுவிஸ் கிளையின் அனுசரனையுடன், முன்பள்ளி மாணவர்களுக்கு, கற்பிக்கும் வகையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் இந்த வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 3 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில், வகுப்புக்களை தொடங்குவதற்கான அறிமுக அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும், எனவே இந்த வகுப்புக்களில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பியவர்களை அன்றைய தினத்தில் கலந்துகொள்ளுமாறும் அபிவிருத்தி மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து வாரத்தில் மூன்று நாட்கள் இந்த வகுப்பு இலவசமாக நடத்தப்படுமெனவும் அபிவிருத்தி மன்றத்தினர் தெரிவித்தனர்.

# வீதியில் இடையூறு கற்கள் அகற்றப்பட்டது




(யாழ்ப்பாணம்)

பாசையூர் கடற்கரை வீதியில் கொட்டப்பட்டிருந்த பாறாங்கற்களைப் பகோ இயந்திரம் மூலம் அகற்றும் பணிகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. இன்று இடம்பெறும் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய தேர்ப்பவனியை முன்னிட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இக்கற்கள் காணப்பட்டது. இவற்றை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபை முதல்வர் பணிப்புரை விடுத்ததைத் தொடர்ந்து இப்பாறாங் கற்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை அரசிற்கே இந்தியா உதவும் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

## சீமான் விடுத்திருக்கும் சீற்ற அறிக்கை



இலங்கைப் பயணத்தின் முடிவில், இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஊடகங்களுக்கு அளித்துள்ள பேட்டி குறித்து நாம் தமிழர் அமைப்பின் தலைவரும் நடிகை வழக்கில் சிக்கியிருப்பவருமான சீமான் கடும் சீற்றமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"இலங்கை இனப் பிரச்சினைக்கு தமிழர்களுடன் சேர்ந்து ஒரு அரசியல் ஏற்பாட்டை உருவாக்க வேண்டும் அதனை உடனடியாக, விரைவாகச் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளோம்" என்று சிவ்சங்கர் மேனன் கூறியுள்ளதாக இந்திய ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், "தமிழர் பிரச்சினைக்கு தங்களுக்கு உகந்த ஒரு அரசியல்த் தீர்வை தமிழ்க் கட்சிகளுடன் பேசி காணவேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு, அந்த விவகாரத்தில் இந்தியா எந்த விதத்திலும் தலையிடாது" என்று சிவ்சங்கர் மேனன் கூறியதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

"தமிழர்கள் பிரச்சினைக்கு வேகமான தீர்வு வேணடும் என்று நாங்கள் விரும்பினாலும், தங்களுக்கு உகந்த ஒரு தீர்வை இலங்கை அரசுதான் உருவாக்க வேண்டும்" என்றும் சிவ்சங்கர் மேனன் விளக்கியுள்ளார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இதுமட்டுமல்ல, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வை உருவாக்குவதாக இலங்கை அரசே கூறியுள்ளது என்றும் கூறுகிறார். இது இல்லாத ஊருக்கு வழிகாட்டும் அயோக்கியத்தனம் அல்லவா?

ஈழத் தமிழர் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு இந்தியா ஒரு தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று கோரும் இலங்கைத் தமிழ்க் கட்சிகள், இந்தியாவின் இரட்டை முகத்தைச் சிவசங்கர் மேனனின் வார்த்தைகளில் இருந்து புரிந்துகொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, இலங்கை அரசிற்கு எதிரான போர்க் குற்றம், தமிழக சட்டப் பேரவையின் பொருளாதாரத் தடை ஆகியன குறித்து ராஜபக்ஷவுடன் விவாதிக்கவில்லை என்றும், தங்களைப் பொறுத்தவரை இந்தியாவில் மத்திய அரசோடு மட்டுமே உறவு கொண்டுள்ளதாகவும் இலங்கை அரசு கூறியதாக மேனன் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

ஆனால் இன்று காலை வெளியான ஆங்கில நாளிதழில், தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது, அதன் சட்ட ரீதியான அடிப்படை குறித்து இலங்கை அரசு கேள்வி எழுப்பியது என்றும், ஆனால் அதற்கு இந்தியக் குழு என்ன பதில் தந்தது என்பதை சிவ்சங்கர் மேனன் வெளியிடவில்லை என்றும் கூறியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கைப் போர் குறித்து ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கையின் மீது இந்தியாவின் நிலைப்பாடு என்று கேட்டதற்கு, "ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் எந்த ஒரு நாட்டையும் தனிமைப்படுத்தி கண்டனத்திற்கு உட்படுத்த இந்தியா விரும்பவில்லை" என்று பதிலளித்துள்ளார்.

இது மனித உரிமை மன்றத்தில் இலங்கை அரசை இந்தியா காப்பாற்றும் என்ற நேரடியான பதிலாகும். தன்னைச் சந்தித்துப் பேசிவிட்டு கொழும்பு சென்ற சிவ்சங்கர் மேனன் எப்படிப்பட்ட நபர் என்பதை அவர வெளிப்படுத்திய வார்த்தைகளில் இருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்கள் அரசியல் சம உரிமை பெற எந்த விதத்திலும் இந்திய மத்திய அரசு உதவாது என்பதையும், தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்னெடுக்க மத்திய அரசு ஒருபோதும் முன்வராது என்பதையும் தமிழக முதல்வரும் தமிழர்களும் புரிந்துகொள்ள வேண்டும என்றும் சீமான் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.




குமரகுரு மல்ரி சொப்
Kumarakuru Multi Shop

வைகாசித் திருவிழா மலிவு விற்பனை

அன்பிற்கினிய எமது வாடிக்கையாளர்கட்கு எதிர்வரும் 30.05.2011 தொடக்கம் 30.06.2011 வரை விசேட சிறப்புக் கழிவு விற்பனையாக ரெடிமேற் ஆடைகளுக்கு இரண்டுக்கு ஒன்று இலவசமாக வழங்கவுள்ளோம். அத்துடன் ஏனைய பொருட்கள் (10,000) பத்தாயிரம் பெறுமதியான கொள்வனவுக்கு உங்கள் அதிஷ்டப்பெட்டியில் இருந்து உங்களால் தெரிவு செய்யப்படும் பரிசுப்பொருட்கள் உடனுக்குடன் வழங்கவுள்ளோம் என்பதனையும் சித்திரை புதுவருடப் பிறப்பிற்கு அதிஸ்டம் பார்க்கப்பட இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் 20.06.2011 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் அதிஸ்டம் பார்க்கப்பட்டு மோட்டார் சையிக்கிள்கள் வழங்கவுள்ளோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். இச்செய்தியை உங்கள் நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றோம்.




குமரகுரு மல்ரிசொப்.
பிரதான வைத்தியசாலை முன்பாக,
A9 வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

குமரகுரு புடவையகம்
A9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

(C/782)

கடமையை உணரும் சக்தியும், கடமையைச் செய்யும் தன்மையும் கொண்ட மனிதனுக்குத் தான் கடவுள் காட்சி தருவார்

- ஸ்வீடன் போர்க்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சட்டைப் பைக்குள் உலகும், உறவும்!

மனிதனுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய அபாயப் பொருட்கள் பட்டியலில் வாகனப்புகை, குளோரோபோம், காரீயம், கிருமிநாசினிகள், சில ஊறுகாய் வகைகள் போன்றன இதுவரை இடம்பெற்றிருந்தன. இப்போது கைத் தொலைபேசியும் அந்தப் பட்டியலில் சேர்ந்திருக்கிறது.

மே மாத இறுதியில் உலக சுகாதார அமைப்பு ஒரு தகவலை வெளியிட்டது. செல்போன் அதிகம் பயன்படுத்துவோருக்கு மூளைப்புற்றுநோய் வரும் என்பதுதான் அந்தத் தகவல்.

செல்போனில் வெளிப்படும் மின்காந்த அலைகள் மூளையின் நரம்புக் கலங்களைச் சுற்றியுள்ள கிளையல் கலம் எனப்படும் கலங்களைத் தாக்கி, புற்றுநோய் ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாகக் கண்டறிந்துள்ளனர். அதாவது தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு, ஒரு நாளைக்கு சராசரியாக அரை மணிநேரம் கைத்தொலைபேசியில் பேசுபவர்களில் 40 வீதம் பேருக்கு மூளைப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. நம்மில் பலபேருக்கு அந்த வாய்ப்பு இருப்பதாகத்தான் தோன்றுகிறது.

எப்படியாயினும், செல்போன் பாவனையைத் தவிர்ப்பது இனி இயலாத காரியமே! அலுவலகம், வீடு, தூரத்து உறவுகள் எல்லாமே செல்போனாக மாறி நம் சட்டைப் பைக்குள் வந்தமர்ந்து விட்டன. நத்தை முதுகில் கூட்டைச் சுமப்பது போல நாமும் அலுவலகத்தையும், வீட்டையும் செல்போன் வடிவில் கையில் தூக்கிக் கொண்டு அலைகிறோம்.

போதாக்குறைக்கு ஒரே போனிலேயே இரண்டு சிம் காட்களை வைத்துக்கொள்ளும் வசதியும் அறிமுகமாகி விட்டது. ஒவ்வொருவரையும் இரண்டு மூன்று 'சிம்' களை வாங்கிப் பாவிக்கத் தூண்டும் வர்த்தக உத்தி இது. பாவிக்கிறவர்களுக்கு மூளைப்புற்றுநோய் வந்தால் பணத்தைக் கட்டிச் சிகிச்சை மேற்கொள்ளவும் அந்தப் பன்னாட்டு நிறுவனங்களே மருத்துவமனைகளையும் திறந்து கொண்டிருக்கின்றன.

தொழில்நுட்பம் மனிதர்களை உலகெங்கும் இணைத்திருப்பதும், தேவையற்ற காத்திருப்பைத் துண்டித்திருப்பதும் உண்மைதான். ஆனால் அது இவ்வாறு நோய்கள் தருவதற்கும் அப்பால் மனித உறவுகளிலும் சில இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

உறவுகளைப் பார்க்கப்போவதுகூட ஒரு நேரமினக்கேடு என்று ஆகிவிட்டது. செல்போன்தான் இருக்கிறதே, எப்போதும் பேசிக்கொள்ளலாம் என்று அந்த நேர்ச் சந்திப்புகள் அருகி வருகின்றன.

கொழும்பு போன்ற மாநகர்களில் வீட்டுக்குள்ளேயே கணவன், மனைவி, பிள்ளைகள் ஒருவரோடொருவர் போனில் பேசிக் கொள்கிறார்கள். மாடியில் இருந்து கணவர் கீழே மனைவிக்குத் தேநீர் கொண்டுவரச் சொல்லி போனில் சொல்கிறார்.

விருப்பமானவர்களைப் பிரிந்து தனித்திருக்கும் சூழலில் தான் அவர்களைப் பற்றி அதிகம் நினைத்துக்கொள்ள முடியும். அது இன்றைக்கு இல்லை. எந்நேரமும் நாம் கைத் தொலைபேசியால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் பிரிவையும் அதனாலுண்டாகும் அன்பின் இன்ப வலியையும் வெகுவாகப் பாடியிருக்கின்றன. இன்று அந்தப் பிரிவு என்கிற வலியின் பத்தை நாம் புரிந்து கொள்ள முடியாதபடி இந்தத் தொலைபேசிகள் செய்துவிட்டன.

பிரிவுக்காக வலியோடு காத்திருப்பதும், வருகையைச் சந்தோஷத்துடன் எதிர்கொள்வதுமான உணர்வுகளை இன்று இழந்து வருகிறோம். இன்று ஒரு மனிதன் விண்வெளிக்குச் சென்று பூமிக்குத் திரும்பி வருவது கூட பெரிய விஷயமில்லை. எந்நேரமும் கூட இருப்பது போன்ற தொடர்பு வசதி இருக்கிறது.

மரங்களை மறைத்து தொலைத் தொடர்புக் கோபுரங்கள் உயர உயரமாக வளர்ந்திருக்கின்றன. செல்போன் சிக்னல் சரியாக இழுக்காத ஊர்கள், கிராமங் கள், வீடுகள் எல்லாம் பரிகாசத்திற்கு உரியனவாகி விட்டன. பலர் இதற்காகவே வீடு மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில்நுட்பம் அவசியம்தான். ஆனால், இதனால் சக மனித உறவு புறக்கணிப்புக்கும், வெறுமைக்கும் உள்ளாவதைத் தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

– ஆசிரியர்.

# போதியளவான பேருந்துச் சேவை விடத்தற்பளைக்கு இல்லை

## அவதிப்படுகின்றனர் அப்பகுதி மக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள விடத்தற்பளை கிராமத்திற்கு போதியளவில் பஸ் போக்குவரத்துகள் இடம்பெறுவதில்லை. இதனால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்திற்கு தினமும் காலை 7 மணிக்கு ஒரு பேருந்து சேவையும் பிற்பகல் 3 மணிக்கு மற்றொரு பேருந்து சேவையுமாக இரு தடவைகள் மாத்திரமே போக்குவரத்துகள் இடம்பெறுவதுடன் இவையும் சில நேரங்களில் சீரான முறையில் இடம்பெறுவதில்லை என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த கிராமத்தில் உள்ள உயர்தர வகுப்பு மாணவர்கள், மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் வெளியிடங்களுக்கு செல்வதற்கும் கல்வியை தொடர்வதற்கும் போக்குவரத்து சேவை சீரின்மையால் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட இக்கிராமத்தில் தரம்1 முதல் 11வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையும் அமைந்துள்ளது. பாடசாலை மாணவர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட நேரத்தைவிட, இடைப்பட்ட நேரங்களிலும் பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டுமென இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து போக்குவரத்து சேவையை சீர் செய்து மேலதிகமாக பேருந்து சேவைகளை ஏற்படுத்தி தருவதே இக்கிராம மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகும் (95)

# மீன்பிடித்துறை அமைச்சினால் மேலும் 3 துறைமுகங்கள் நிர்மாணம்

(கொழும்பு)

மேலும் மூன்று புதிய மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணிக்க மீன்பிடித்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்குரிய பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தற்போது அமைச்சின் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச மீனவர்களின் அவசியத்தை நிர்ணயித்தே புதிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஏற்கனவே குருநகர் மற்றும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடலைப் பாதிக்காத வகையில் கடற்கரைப் பிரதேசங்களை சேதமாக்காத வகையிலுமே இந்த மீன்பிடித்துறை முகங்கள் அமையப் பெறவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் மூன்று இலட்சத்து 39 ஆயிரத்து 73[illegible] மெற்றிக் தொன் மீன்கள் பிடிக்கப்பட்ட அதேவேளை, இந்த வருடத்தில் 4 இலட்சம் மெற்றிக் தொன் மீன்களைப் பிடிக்க திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தையல் பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

(உடுவில்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவின் ஏற்பாட்டில் ரூபவி வாழ்க்கை தொழில்பயிற்சி நிலையத்தினூடாக தையல் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் ஆளணியினரைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. 32 பேர் இந்நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியநிலையில், 25பேர் இப்பயிற்சி நெறிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்நேர்முகத்தேர்வு உடுவில் பிரதேச மனித வள அபிவிருத்தி உதவியாளரினால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (55)

# பாதுகாப்புச் செயலர் பயணம் செய்யவிருந்த உலங்குவானூர்தியில் இயந்திரக் கோளாறு

## – இறுதிநேரம் கண்டுபிடிக்கப்பட்டதால் அனர்த்தம் தவிர்ப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்குப் பயணம் செய்யவிருந்த உலங்குவானூர்தியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருந்தது கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் கிளிநொச்சி சென்றிருந்தார்.

கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்றிருந்தனர்

இந்தக் கோபுரத் திறப்பு விழாவுக்கு ஜனாதிபதியும், கோத்தபாய ராஜபக்ஷவும் புறப்பட முன்னரே ரணில் விக்கிரமசிங்கவின் தாயார் நளினி விக்கிரமசிங்கவின் மரணச் செய்தி அவர்களுக்குக் கிடைத்தது.

மாலையில் இறுதி நிகழ்வுகள நடைபெறவிருந்ததால் ஜனாதிபதியும், கோத்தபாய ராஜபக்ஷவும் அவசரமாக கொழும்பு திரும்ப முயன்றனர்.

அவர்களை ஏற்றிச் செல்ல முக்கிய பிரமுகர்களுக்கான இரண்டு உலங்குவானூர்திகள் கிளிநொச்சியில் காத்திருந்தன.

அவற்றில் ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார். அவர் மாலை 5 மணியளவில் கொழும்பு திரும்பி நளினி விக்கிரமசிங்கவின் உடலுக்கு இறுதிவணக்கம் செலுத்தினார். ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ வரவில்லை.

அவரும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்கவும் பயணம் செய்வதற்காக உலங்குவானூர்தியில் ஏறி அமர்ந்திருந்த நிலையில் அதில் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கடைசி நேரத்தில் கண்டுபிடித்தார்.

இதனால், அதில் பயணம் மேற்கொள்வது ஆபத்தானது என்று விமானி கூறியதால், வேறொரு நிரந்தர இறக்கை விமானம் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு செல்ல நேரிட்டது.

உலங்குவானூர்தியில் ஏற்பட்ட கோளாறு கடைசிநேரத்தில் கண்டிபிடிக்கப்படாது போயிருந்தால், நடுவானில் பாரிய விபத்து ஒன்றை சந்திக்க வேண்டியிருந்திருக்கும் என்று விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# வளலாய் வீதிகளில் தவம் கிடக்கும் கற்குவியல்கள்

(புத்தூர்)

வலி.கிழக்குப் பிரதேசசபை நிர்வாகப்பகுதியிலுள்ள வளலாய் ஒழுங்கைகள் திருத்துவதற்கென கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பறிக்கப்பட்ட கற்கள் எந்த விதவேலைகளுக்கும் பாவிக்கப்படாது அனாதரவான நிலையில் கிடப்பதையிட்டு அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். இவ்வீதிகள் நெல்சிப் திட்டத்தின் கீழுள்ள வேலைகளுக்கு கல் பறிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கற்கள் பறிக்கப்பட்ட வீதிகள் திருத்தப்படாமையிட்டு இவ்வீதிகளால் மக்கள் வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள் மூலம். பிரயாணம் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக்காணமுடிகிறது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து வீதியைத்திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)

# உடுவில் மகளிர் கல்லூரியில் "சுழலும் சொல்லாடுகளம்"

(யாழ் நிருபர்)

உடுவில் மகளிர் கல்லூரி தமிழ்மன்றம் நடாத்தும் கம்பராமாயணத்தில் வாலிவதம் தொடர்பான "சுழலும் சொல்லாடு களம்" எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ஷிராணிமில்ஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், தமிழ் மன்றக் காப்பாளர் திருமதி சுனித்தாஜெபரட்ணம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நடுவராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் நா. குழந்தைவேலு ஆகியோரைக் கொண்ட தாகவும் இந்நிகழ்வு இடம்பெறும். சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன், கிளிநொச்சி மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் கு. றஜீபன், சரவணை நாகேஸ்வரி ம.வி. ஆசிரியர் கு.பாலசண்முகன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம் ஆகியோர் சுழலும் சொல்லாடுகளத்தில் வாதிடுவர் (10)

# காணி உரிமத்தை உறுதிசெய்யும் "பிம்சவிய" திட்டம் யாழிலும் அமுல்

(அச்சுவேலி)

காணி உரிமத்தை உறுதிசெய்யும் "பிம்சவிய" நிகழ்ச்சித்திட்டமானது மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச் சினூடாக யாழ். மாவட்டத்தில் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம் மிகவும் பாதுகாப்பானதும் பய னுள்ளதுமான தற்போது இலங்கையில் காணியின் உரிமத்தை உறுதி செய்வதற்காக பயன்படுத் தப்பட்டுவரும் காணி உறுதிக்குப்பதிலாக பூரண அரசாங்க உத்தரவாதமுடைய காணி உரிமச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் காணிகள் புதிதாக அளந்து எல்லைகளிட்டு சிக்கலற்ற உரிமத்தை உறுதி செய்து உரித்துச் சான்றிதழ்கள் விநியோகிக் கப்படும். இந் நிகழ்ச்சித்திட்டம் தற்போது யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இலவசமாக நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் காணிப்பதிவு முறையை மிகவும் நம்பகத்தன்மையுடனும் வினைத்திறன் மிக்கதும் இலகுவான முறையொன்றாக மாற்றியமைத்து காணிப பிரச்சினைகளையும், பிணக்குகளையும் தீர்த்து வைப்பதனூடாக காணி உரிமத்தை வலுப் படுத்தி சிறந்த காணி முகாமைத்துவத்திற் காக கணினி மயப்படுத்தப்பட்ட காணி தகவல் முறை ஒன்றை தோற்றுவித்தலே இப் புதிய திட்டத்தின் நோக்கம் எனவும் இதன் மூலம் பொது மக்கள் பெரிதும் பயனடைவர் என்றும் மேற்படி அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

# போதியளவு நிதி கிடைக்கப் பெற்றதும் வன்னியிலும் வாழ்வாதார திட்ட உதவிகள்

## வணிகர் கழகத்தலைவர் ஜெயசேகரம் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பகுதியில் யுத்தகாலத்தின்போது அதிகம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி யுள்ள நிலையில், அவர்களுக்கு தமது பகுதிக்கு யாழ். வணிகர் கழகத்தால் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் வாழ்வாதார உதவித்திட்டத்தைச் செயற்படுத்துமாறு கோரியுள்ளனர்.

அங்கு இவ்வாறான வாழ்வாதாரத்திட்டத்தைச் செயற்படுத்த நிதி போதாமல் உள்ளது. அதற்கான நிதி தேவைப்படும் அளவு கிடைத்ததும் அங்கும் இத்திட்டம் விஷ்தரிக்கப்பட்டு அம்மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என யாழ். வணிகர் கழகத்லைவர் ஆர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நாவலடி பகுதி மக்களுக்கான யாழ். வணிகர் கழகத்தின் வாழ்வாதார உதவியாக கோழிக்கூடு கள், கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங் களுக்கு யாழ். வணிகர் கழகத்தால் வழங்கப்பட்டு வரும் வாழ்வாதார உதவியின் மூலம் யாழ். மாவட்டத்திற்கு தென்பகுதியில் இருந்து தினமும் இறக்குமதி செய்யப்படும் 10,000 கோழி முட்டை களில் 4000கோழி முட்டைகளை குறைக்க முடியும். அதன் மூலம் எமது தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவி லும் தலா 10 குடும்பங்களுக்கு 30 கோழிக்குஞ் சுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. மொத்த மாக 4500 கோழிகள் இவ்வாறு வழங்கப்படவுள் ளது. இவை தினமும் குறைந்தது 4000 முட்டை களையாவது தரக்கூடியவை. அதன் மூலம் தென் பகுதியில் இருந்து தினமும் இறக்குமதி செய் யப்படும் 10000 முட்டைகளில் 4000 முட்டைகளை நாமே உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலமாக எமது பிரதேசத்தின் தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் அத்துடன் இதற் கான பயனாளிகள் தெரிவில் வறிய குடும்பங் களும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம் குறித்த குடும்பங்கள் தமது வாழ்வா தாரத்தை உயர்த்தி முன்னுக்கு வரமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கும்பாபிஷேக மலரில் கிண்டல்; கோயில் பூசகர் சீற்றம்

(யாழ். நிருபர்)

கோண்டாவில்-நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரில் உள்ள கட்டுரை ஒன்று தொடர்பாக அப்பகுதியில் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசாவை ஆசிரியராகக் கொண்ட மலர்க் குழுவினரால் தயாரிக்கப்பட்ட "நெட்டிலிப்பா யான் எழில்" என்ற இந்தக் கும்பாபிஷேக மலர் 05.06.2011 அன்று மேற்படி ஆலய கும்பாபிஷேக நிகழ்வின்போது வெளி யிட்டு வைக்கப்பட்டது.

அம்மலரில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு எழுதியிருக்கும் "சைவத் திருத்தலங்கள் அன்றும் இன்றும்" ...டுரை தொடர்பாகவே சர்ச்சையும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரையை ஆட்சேபித்து, அவ்வாலயத்தின் பூசகர் கும்பாபிஷேகத்திற்கு மறுநாள் கோயில் ஒலிபெருக்கி மூலம், "மலருக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் அனைவரும் அழிந்து போவார்கள், நாசமாகப் போவார்கள்" என்று வசைபாடியுள்ளராம். அத்துடன் இம்மலரை வாங்கி வீடுகளில் வைத்திருப்பவர்களுக்கு சர்வநாசம் ஏற்படும் என்றும், மலரை வைத்திருப்பவர்கள் உடனே கோயிலில் கொண்டுவந்து ஒப்படைத்துவிடவேண்டும் என்றும் எச்சரித்துள்ளாராம்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பூசகரின் சீற்றத்திற்குக் காரணமான அந்தக் கட்டுரையின் பகுதி இதுதான்:

பூசகர்கள் மோட்டார் சைக்கிள்களில் ஆலய/மணிமண்டபத் தினுள்ளே சென்று காலைக்கூட கழுவாது கருவறைக்குள் சென்று நின்ற நிலையில் விளக்கைக் காட்டிவிட்டு, சில விநாடிகளில், ஓடும்காலம் அன்றிருந்ததில்லை. வேதம் ஓதிய வேதியர் அதற் கேற்ற வகையில் வாழ்ந்து காட்டிய வரலாறு இன்று பொய்யாய் புனைகதையாய் போயிற்று. 'வேதம் ஓதிய வேதியற்கு ஓர் மழை' என்ற வாக்கியம் இன்று பொய்த்துப் போய்விட்டது. இத னால் மக்கள் மத்தியில் பக்தி ஒரு மாயை ஆகிவிட்டது.

# மின்சார சபையின் அலட்சியப்போக்கு; இருளில் நடைபெற்ற அந்தோனியார் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மின்சார சபையினரின் அறிவிப்பின் பேரில் குடாநாட்டின் சில இடங்களில் நேற்று முன்தினம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. காலை 8.45 மணிக் குத் துண்டிக்கப்பட்ட மின்சாரம் மாலை 5.30 மணிக்கு வழமைக்குத் திரும்புவது யாவரும் அறிந்ததே.

எனினும் அன்றைய தினம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந்திரு விழா வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இரவு 7.45 மணி கடந்தும் பாசையூர் பகு திக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இது தொடர் பாக பாசையூர் பங்குத் தந்தை அடிக்கடி தொலை பேசி மூலம் சுன்னாகம் தலைமையகத்துக்கு அறிவித்தல் கொடுத்தும் உடனே அங்கிருந்து மின்சாரம் வழங்குவதாக பதில் தெரிவிக்கப்பட்டும் மின்சாரம் வழங்கப்படாததால் பெரும் சிரமங்களை ஆலயத்துக்கு வந்த மக்கள் எதிர் கொண்டனர்.

பங்குத்தந்தையினால் ஆல யத் திருவிழா தொடர்பாக ஏற் கனவே சுன்னாகம் மின்சார சபைக்கு அறிவித்தல் அனுப்பப் பட்டது. எனினும் இது தொடர் பாக மின்சார சபையினர் கவ னத்தில் எடுக்காது தமது அலட் சியப் போக்கினால் இரவு 7.45 மணி கடந்தும் மின்சாரம் வழங் கப்படாமல் இருந்தது, வழிபாடு நடைபெறுவதற்கு பெரும் இடை யூறுனை ஏற்படுத்தியதாகப் பங்குத்தந்தை மன வேதனை யுடன் தெரிவித்தார்.

மேலும் துண்டிக்கப்பட்ட மின்சாரம் ஏனைய இடங்களுக்கு அதாவது அருகில் உள்ள கிராம மான குருநகர் பகுதிக்கு 5.40 மணிக்கு வழங்கப்பட்டிருந்தது. திருவிழா வழிபாடுகளுக்கு அதிகளவான மக்கள் வருகை தந்தமையினால் திருடர்கள் தொல்லை இருப்பதற்கு சாத்தியம் இருப்பதாக வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அடிக்கடி பங்குதந்தையினால் மின்சார சபைக்கு மேலும் மேலும் எடுத்துக்கூறப்பட்டும் இருந்தது. எனினும் பூசை வழிபாடுகள் நிறைவடைந்த பின்பு மக்கள் கடும் இருள் சூழ்ந்த நிலையிலேயே தங்கள் இடங்களுக்குச் சென்றனர். பாசையூர் இளைஞர் கழகத்தினர் "சாஜ் லைற்" மூலம் வீதிகளுக்குச் சென்று ஒளி கொடுத்தனர். இது தொடர்பாக பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு மேலதிகமாக அவர்கள் வர வழைக்கப்பட்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத் தப்பட்டனர். எனினும் அசாம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்றதாக அறியப்படவில்லை. (21)

# கள் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்த சொந்தக்காணிகள் இல்லாமையே காரணம்


## யாழ். ப.தெ.வள அபி.கூ.சங்கத்தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

சொந்தக் காணிகளில் இயங்காததால் கள் விற்பனை நிலையங் களை நவீன மயப்படுத்தமுடியாதுள்ளதாக யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத் தலைவர் கவலை வெளியிட்டுள்ளார்.

எமது ஐந்துகள் விற்பனை நிலையங்களில் யாழ். நகரில் உள்ள விற்பனை நிலையம் மட்டுமே. எமது சங்கத்தின் நிலப்பரப்பில் உள்ளது. ஏனையவைகள் தனியாரிடம் குத்தகைக்கு பெறப்பட்ட காணிகளிலேயே இயங்கிவருகிறது..

இதனால் விற்பனை நிலைய கட்டடங்களை அமைப்பதற்கோ உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கோ முடியாத நிலை உள்ளது. சொந்த காணிகளில் இவை அமைந்திருந்தால் நாம் அதிக நிதி முதலீட்டுடன் அவற்றை நவீனமயப்படுத்தி தளபாட வசதிகளுடன் சீரமைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(கா)





கரவெட்டி பிரதேச சமுர்த்தி சமுக அபிவிருத்தி மன்றத்தினால் சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதேசசெயலர் எஸ். சத்தியசீலன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கும் கருத்திட்ட முகாமையாளர் உயர்கல்வியை தொடரும் மாணவி ஒருவருக்கும் புலமைப்பரிசிலை வழங்குவதைக் காணலாம். (18)

# முன்பள்ளி ஆசிரியரின் உழைப்பும், அர்ப்பணிப்புமே நாட்டின் அபிவிருத்தியின் ஊன்றுகோலாகும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**முன்பள்ளி ஆசிரியர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும் நாட்டின் அபிவிருத்திக்கு ஊன்றுகோலாக அமைகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டமுன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள் தமது நீண்டகால உழைப்பிற்கான வேதனத்தை இன்று தொடக்கம் பெற ஆரம்பித்துள்ளனர். இம்முயற்சிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரும் உறுதுணையாக இருந்துள்ளார்கள். மிகநீண்டகாலமாக வேதனங்கள் எதனையும் பெறமுடியாத நிலையிலும் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்களை நான் பாராட்டுகின்றேன். உங்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும் நாட்டின் அபிவிருத்திக்கு ஊன்றுகோலாக அமைகின்றன.

இதேவேளை இன்றிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற இக்கொடுப்பனவுத்தொகை உங்கள் வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக அமையுமென நான் கருதவில்லலை. எனவே நீங்கள் பகுதிநேர வாழ்வாதார முயற்சிகளை மேற்கொள்வதற்கான உதவிகளையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம். அத்தோடு முன்பள்ளிஆசிரியர்கள் தமது கல்வித்தரத்தினை மேம்படுத்திக் கொள்வதற்கான துறைசார்ந்த கற்கை நெறிகளை வழங்கவும் எம்மால் உதவ முடியும். இந்த சம்பளத்திட்டத்தினை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கும் நாம். அனைவரும் தூண்டுகோலாக இருப்போம்

முன்பள்ளிகளுக்கு சீரான கல்விக் கொள்கை ஒன்றினை கொண்டுவர வேண்டிய தேவை உள்ளது. அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அத்தோடு அனைத்து முன்பள்ளிகளுக்கும் ஒரேசீரான வளப்பங்கீட்டினை மேற்கொண்டு சீரான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுமுள்ளோம். இதற்கான ஆரம்பக் கட்டபபணிகள் நடைபெற்று வருகின்றன என அவர் மேலும் கூறினார்.

நேற்றுமுன்தினம் கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் முகாமைத்துவத்துவத்திட்டத்தின்கீழ் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது மிக நீண்டகாலமாக வேதனங்கள எதனையும் பெறாது தொடர்ந்து பணியாற்றிவந்த ஆசிரியர்கள் இக்கொடுப்பனவினை பெற்றக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கல்வியமைச்சின் பதில் செயலாளர் இரவீந்திரன், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ரி.குருகுலராஜா, ஆரம்பப்பிள்ளைப்பருவ உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஜெயா தம்பையா, கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பங்கயச்செல்வன், ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (29)


## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(13.06.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம் வைகாசி 30 ஆம் நாள்.
இராகுகாலம 7.22–8.52, சுபநேரம் 11.52–1.22
நட்சத்திரம் விசாகம் பி.இ 3.36 வரை
திதி: துவாதசி காலை 7.33வரை திரயோதசி பி.இ 5.30வரை. பிரதோஷ விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேக நலமின்மை, காரியத்தடை, நல்லசெய்தி வருத.

**ரிஷபம்:**– பணக்கஷ்டம், தேகநலம் பாதிப்பு, குடும்பத்தில் குழப்பம், ம[illegible]ச்சஞ்சலம், கவலை.

**மிதுனம் :**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணகஷ்டம், உடல்நலமின்மை, காரிய சித்தி, உறவினர் வருகை.

**கடகம்:**–மருத்துவச் செலவு, காரியத்தடை, குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, உடல்நலக் குறைவு.

**சிம்மம்:**– பணக்கஷ்டம், காரியத்தடை, உடல் நலம் பாதிப்பு, மனச்சஞ்சலம், வீண் அலைச்சல்.

**கன்னி :**– காரியசித்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம்வரும், உறவுகள் தொல்லை, விபத்து வரலாம்.

**துலாம் :**– பணவரவு, தேக ஆரோக்கியம், காரிய சித்தி, அயரவலர் பகை, குடும்பத்தில் குழப்பம்.

**விருச்சிகம்:**– காரியத்தடை, தேகஆரோக்கியம், பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி. விபத்து வரலாம்.

**தனுசு:**– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், தூரத்திலிருந்து நல்ல சேதி, மனமகிழ்ச்சி.

**மகரம்:**– பணக்கஷ்டம், குடும்பத்தில் அமைதி, வீண் அலைச்சல், தேக நலமின்மை, மன உளைச்சல்.

**கும்பம் :**– காரியத்தடை, உடல் நலம்பாதிப்பு, மனசஞ்சலம், குடும்பத்தில் குழப்பம், கவலை.

**மீனம்:**– பணவரவு, தேக ஆரோக்கியம், காரிய சித்தி, வீண் அலைச்சல், மன உளைச்சல்.


# தேசிய தகவல் தொழில்நுட்ப விருது 7 பாடசாலைகளுக்கு கிடைத்தன

(அச்சுவேலி)

தேசிய தகவல் தொழில்நுட்ப விருது 2009 தேசிய மட்டத்திலான போட்டிகளில் வடமாகாணத்தில் 7 பாடசாலைகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

இதில் வவுனியா மாவட்டத்திலிருந்து கடைச்சூரி கருவேப்பம் குளம் ஜி.ரி.எம்.எஸ் பாடசாலையும், யாழ்.மாவட்டத்திலிருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளே இவ்விருதினைப் பெற்றுள்ளன. (03)

# தொண்டு நிறுவன செயற்திட்டங்கள் ஆளுநர் தலைமையில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஐ.நாவின் உதவி அமைப்புக்கள், வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆளுநரின் பணிமனையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உள்நாட்டு வெளிநாட்டு தொண்டுநிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உதவி அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை ஆளுநரிடம் கையளித்தனர்.

இக்கூட்டத்தில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண பிரதி பிரதம செயலாளர் இ.இராசநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நாட்டுக்கூத்துப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**சிந்துநடைக்கூத்து**

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/பாரதிவித்தியாலயம், கிளி/முழங்காவில் ம.வி.

**இசை நாடகம்**

கிளி/கிளிநொச்சி ம.வி, கிளி/முருகானந்த ம.வி, கிளி/பூநகரி ம.வி.

**விசேட கூத்து**

கிளி/பளை றோ.க.த.க பாடசாலை, கிளி/கனகபுரம் ம.வி. (112)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் உதவித்தொகையாக கடன்திட்டம்

(நேற்றைய தொடர்ச்சி...)

(கட்டுவன்)

கே.தனகராஜா - (மல்லாகம் மத்தி) 3இலட்சம், இ.சிவகுமார் - (மல்லாகம் தெற்கு) 2இலட்சம், ஏ.மரியசைலன் - (மல்லாகம் வடக்கு) 2இலட்சத்து 50 ஆயிரம், கே.பரலோகராஜா - (மல்லாகம் வடக்கு)2இலட்சத்து 50 ஆயிரம், இஜெயரூபன் (அளவெட்டி மேற்கு) 2இலட்சம், பொ.சாகர் அளவெட்டி மேற்கு, 2இலட்சம், எம்.வடிவழகன் - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50 ஆயிரம், எஸ்.கவிதா - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50 ஆயிரம், ரி.மேகினி - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ஜே.ஜெனிதா - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எம்.சசியந்தன் (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ம.இந்திரன் - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ரி.கவியதாசன் - அளவெட்டி மேற்கு) 2இலட்சம், ஏ.ஸ்ரீமனோகரன் - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ஆர்.சிவசுயா - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், இ.யுகராஜா (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ரி.ரவீந்திரன் - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், என் ஜெயகுமார் - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எஸ்.கந்தசாமி (அளவெட்டி தெற்கு) 2இலட்சம், வி.வனிதாதேவி - (அளவெட்டி கிழக்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ரி.தவ குலராஜன் - (அளவெட்டி தெற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ஐ.சத்தியசீலன் - (அளவெட்டி வடக்கு) 2இலட்சம், ஜெ.சிவபாலன் - (அளவெட்டி வடக்கு) 2இலட்சம், டி.வரத ராஜா - (அளவெட்டி வடக்கு) 2இலட்சம், எஸ்.தர்மசீலன் (அளவெட்டி வடக்கு) 2இலட்சத்து 50ஆயிரம், வி.ரமணன் - (அளவெட்டி வடக்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எஸ்.தயாளினி - (அளவெட்டி மத்தி) 2இலட்சத்து 50ஆயிரம், எஸ்.கலைக்கோபாலன் (அளவெட்டி வடக்கு) 3இலட்சம், எஸ்.சிவசகீதன் (தெல்லிப்பளை கிழக்கு) 3இலட்சம், எஸ்.ஜெயதீஸ்வரன் (வித்தகபுரம்) 2இலட்சத்து 50ஆயிரம், என்.மகேந்திரன் (அளவெட்டி) 2இலட்சம், கே.நாகராசா - அளவெட்டி தெற்கு) 2இலட்சம், கே.வசந்தசீலன் (அளவெட்டி தெற்கு) 2இலட்சம், வை.வசந்தகுமார் - (அளவெட்டி தெற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், பி.தர்மினி - (அளவெட்டி தெற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், கே.கணேசலிங்கம் (கணேஸ்வரம்)2இலட்சத்து 50ஆயிரம், என்.லோகன் - (அளவெட்டி வடக்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எம்.செல்லத்தம்பி - (அளவெட்டி தெற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எம்.ஜெயந்தினி (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், இ.சிவாஜினி - (அளவெட்டி வடக்கு) 2இலட்சம், எஸ்.ஜெயதேவி - (துர்க்காபுரம்) 2இலட்சத்து 50ஆயிரம், வி.கணேஸ்வரி (அளவெட்டி வடக்கு) 2இலட்சம், பி.சத்தியபாமா - (அளவெட்டி தெற்கு) 3இலட்சம், எஸ்.பத்மநாதன் - (கணேஸ்வரம்) 3இலட்சம், கே.கலைவாணி - (அளவெட்டி தெற்கு)2இலட்சத்து 50ஆயிரம், பி.இரத்தினம் - (அளவெட்டி மத்தி) 2இலட்சத்து 50ஆயிரம், எம்.தங்கவேலி - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், கே.பிரவினி - (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், பி.புவனேஸ்வரி (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எஸ்.கிராசேந்திரம் (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், பி.தம்பிமுத்து (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், ரி.மதிவாணன் (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், பி.ரமேஸ் (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், எஸ்.ஜெயக்குமார் (அளவெட்டி மேற்கு) 2இலட்சத்து 50ஆயிரம், (22)

# வடமாகாண பாடசாலை மட்ட மரதன்; சாந்தரூபன், விமலாதேவி முதலிடம்





(நெல்லியடி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் எம். சாந்தரூபன் மற்றும், பி. விமலாதேவி ஆகியோர் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. இதன் முதல் போட்டியாக 21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆண், பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டி கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகி கரவெட்டி பிரதேசசபைக்கு முன்பாக நிறைவடைந்தது.

இதில் முதல் பத்து இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் விபரம் வருமாறு:

**ஆண்கள்:**

எம். சாந்தரூபன் (வ. நெளுக்குளம், கலைமகள் மகா வித்தியாலயம்) தே. தேவதாசன் (மு. கச்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஆர். பிரிய சாந்தன் (கிளி. இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஈ. சாந்தன் (வ. சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஜெ. ஜெராட் டிலோஜன் (கிளி. இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), கே. சுதர்சன் (மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), வி. பிரவேந்தன் (வ. புதுக்குளம் ம.வி.), கே. தர்சன் (வ. செட்டிகுளம் ம.வி.), எஸ். செபஸ்ரியாம்சில் (மன். புனித வளநார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), ஜெ. ஜோகராஜ் (யாழ். தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலம்)

**பெண்கள்**

பி. விமலாதேவி (கிளி. கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), எஸ். தீபா (கிளி. தர்மபுரம் ம.வி), இ. சாளினி (வ. சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை), ஜே. ஜேசுமரயகொரட்டி (யாழ். எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்), மு. ஜெயந்தினி (கிளி. இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ். வனோஜா (வ. கல்மடு ம.வி), எஸ். மேரிசுஸ்மிதா (மன். புனித வளநார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), ஏ. ரேணுகா (யாழ். கச்சாய் அரசினர் தமிழக் கலவன் பாடசாலை), ஏ. அனா (மன். எழுத்தூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), பி. ரேணுகா (வ. ஓமந்தை மத்திய கல்லூரி)

இதில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான சான்றிதழ்களும், முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும், 1ஆம் இடத்தைப் பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணமும் வடமாகாண மெய்வல்லுநர் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுமென வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (12)

# சென். ஜோன்ஸ் 97 ஓட்டங்களால் சென். பற்றிக்ஸை தோற்கடித்தது

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 97 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது.

17 வயதுப் பிரிவின் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பிரிவு மூன்று அணிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பிரிவு இரண்டு அணிக்குமிடையில் 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எட்வின் ஜேய் 51, கிருஜன் 50 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் காவஸ்கர் 17 பந்துகளில் நான்கு சிக்ஸர்களும், மூன்று பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தனுஜன் மூன்று, அஜித் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 34.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மொரிஸ் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கஜன் மூன்று, பிருந்தவன், காவஸ்கர், சிவலக்ஷன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**விளையாட்டுச் செய்திகள்**

## ஹொக்கி அணி தகுதி

21 வயதுக்குட்பட்ட மகளிர் ஹொக்கி அணி பாங்கொக்கில் இடம்பெற்ற ஆசிய பெட் கிண்ண போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 2011ஆம் ஆண்டுக்கான ஆசிய ஹொக்கிப் போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பினை இலங்கை அணி பெற்றுக் கொண்டது.

## ஸ்ரீமுருகன்-மோகனதாஸ் இறுதிப்போட்டிக்குத் தகுதி

(கைதடி)

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஸ்ரீ முருகன் மற்றும் மோகனதாஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வரும் இப்போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டிகளில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன், மட்டுவில் வளர்மதி அணிகள் மோதின. இதில் ஸ்ரீமுருகன் அணி 2 : 1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், கைதடி சித்திவிநாயகர் அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2 : 0 என்ற நேர் செற்றில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# சிறப்பான தாக்குதல் ஆட்டத்தின் மூலம் இறுதிக்குள் நுழைந்தது இராணுவ அணி

(யாழ்ப்பாணம்)




சிறப்பான தாக்குதல் ஆட்டத்தின் மூலம் பொலிஸ் அணியை இலகுவாக வீழ்த்தி எவ்.ஏ. கால்பந்து கிண்ணத்துக்கான இறுதிப் போட்டிக்கு இரா ணுவ அணி தகுதி பெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டியின் முதலாவது அரை யிறுதிப் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த இராணுவ அணி மிகச் சிறப்பான முறையில் கோல்களை போட்டுக் கொண்டது.

போட்டியின் முற்பாதி ஆட்டத்தின் ஆறாவது, ஏழாவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு முன்னிலை வகித்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தின்போதும் 48, 51ஆவது நிமிடங்களிலும் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு இறுதிப் போட்டி வாய்ப்பை உறுதி செய்தது. போட்டியின் இறுதி நேரத்திலும் (86ஆவது நிமிடதிலும்) ஒரு கோலை போட்டு 5-0 என்ற கோல் கணக்கில் இராணுவ அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (20)

# 37ஆவது ஆண்டு நிறைவு கால்பந்தாட்டம் கிண்ணத்தைச் சுவீகரித்தது குருநகர் பாடுமீன்





(யாழ்ப்பாணம்)

கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

இதில் இளவாலை யங்கெஹன்றிஸ் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முற்பாதி ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் பாடுமீன் அணி கோல் போட்டது. இதனைத் தொடர்ந்து யங்கெஹன்றிஸ் அணியும் கோல் போடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது. இருப்பினும், பாடுமீன் அணியின் சிறப்பான தற்காப்பு ஆட்டத்தின் மூலம் அதற்குப் பலன் கிடைக்கவில்லை. போட்டியின் 55ஆவது நிமிடத்தில் மிகவும் சாதுரியமான முறையில் பாடுமீன் அணி இரண்டாவது கோலைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பாடுமீன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியில் இரு அணிகளும் சவாலான முறையில் விளையாடியமை ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்திய அதேவேளை, இரு அணி ஆதரவாளர்களையும் திகைப்படைய வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொற்றாவத்தை சிவானந்த அணியும், சங்கோட்டை சென் சேவியர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே சிறப்பான தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதன் காரணமாக எந்த அணியும் கோல் எதனையும் போடவில்லை. இறுதியில் சமனிலை உடைப்பு மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் சிவானந்தா அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

முதலாமிடத்தைப் பெற்ற பாடுமீன் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட யங்ஹென்றிஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 15ஆயிரம் ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சிவானந்தா அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (க)

# தொடரை வென்றது இந்தியா

(ஆன்டிகுவா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை இந்திய அணி கைப்பற்றிக் கொண்டது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் ஆன்டிகுவா மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக ஆடிய ரஸ்செல் ஆட்டமிழக்காது ஐந்து சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 92 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பட்டேல், மிஸ்ரா தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணி 46.2 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் ரோகித் சர்மா ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக ரஸ்செல் தெரிவானார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரண்டு போட்டிகள் மீதமுள்ள நிலையில் இந்திய அணி தொடரைக் கைப்பற்றிக்கொண்டது.



# தொடர்பில்லை -கிளார்க்

(சிட்னி)

ஒப்பந்தப் பட்டியலில் இருந்து கடிச்சை நீக்கிய விவகாரத்தில் எனக்கு எந்த தொடர்பும் கிடையாது. இது தேர்வாளர்களின் பணி. நீண்டகாலமாக சிறப்பாக விளையாடி வரும் வீரர் கடிச். அவரது நீக்கம் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இதற்கு என்னால் எதுவும் கூறமுடியாது என அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

## தனித் தனியே தலைவர்கள் சரியானது என்கிறார் கிறிஸ்டன்

(ஜோகனஸ்பர்க்)

தென்னாபிரிக்க அணி நிர்வாகம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்குத் தனித் தனியே தலைவர்களை நியமித்தது சரியான முடிவு என அந்த அணியின் பயிற்சியாளர் கிறிஸ்டன் தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கு தனித்தனியே தலைவர்களை நியமித்துள்ளனர். இது அணியின் வளர்ச்சிக்கு நிச்சயமாக உதவும் என நினைக்கிறேன். அணி வீரர்கள் உண்மையிலேயே மிகவும் திறமையான மற்றும் அனுபவமிக்க வீரர்கள். இவர்கள் தற்போது வெற்றி பெறத் தவறுவது ஏன் என்று தெரியவில்லை. இரண்டாண்டு ஒப்பந்தத்தில் பணிபுரிய வந்துள்ளேன். உலகக் கிண்ணத் தொடர்வரை பணிபுரிவதைப் பற்றி தற்போது சிந்திக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறப்பாக விளையாடும்போது ஓய்வை அறிவித்தமை சரியானது

## என்கிறார் முரளிதரன்

(துபாய்)

சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும்போதே ஓய்வு பெற்றுவிட வேண்டும் என நான் எடுத்த முடிவு சரியானதுதான் என முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் என்னால் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு விளையாட முடியும். ஆனால் மோசமான போர்ம் காரணமாக, அணியில் இருந்து நீக்கப்பட்டு பின் ஓய்வு பெறுவதை விட, சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும் போதே ஓய்வு பெற்றுவிட வேண்டும் என விரும்பினேன். எனது இந்த முடிவு சரியான நேரத்தில் எடுத்தது தான் என்று நினைக்கின்றேன். எனது 19 ஆவது வயதில் இலங்கை அணியில் வாய்ப்பு கிடைத்தது. இதையடுத்து 18 ஆண்டுகளாக தொடர்ந்து கிரிக்கெட்டில் நீடித்து வருகின்றேன். எனது ஓய்வு காரணமாக மெண்டிஸ், ரந்திவ், ஹெராத் போன்றவர்களுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கும். அவர்களும் தங்கள் திறமைகளை நிரூபிக்க முடியும்.

கடந்த 1996இல் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றதை மறக்க முடியாது. தவிர, பல்வேறு சிறப்பான அணிகளுக்கு எதிராக, நாங்களும் அசத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லோட்சில் விளையாடாதது வருத்தமில்லை என்கிறார் சனத்

(லண்டன்)

எனது கடைசி போட்டியை லோர்ட்சில் விளையாட முடியாமல் போவதற்காக எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஓவலும் எனக்கு பிடித்தமான மைதானங்களில் ஒன்றுதான். இவ்விரு மைதானங்களிலும் நான் போதுமான அளவுக்கு விளையாடி இருக்கிறேன் என சனத் ஜெயசூரிய தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான சனத் ஜெயசூரிய, இங்கிலாந்துக்கு எதிராக நடக்கும் முதலாவது ஒரு நாள் போட்டியுடன (ஜுன் 28ஆம் திகதி, ஓவல் மைதானம்) ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஜெயசூரியவின் பிரிவுபசாரப் போட்டியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில கண்டுகளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அரச குடும்ப கௌரவிப்பில் இங்கிலாந்து அணி வீரர்கள்

(லண்டன்)

**அவுஸ்ரேலிய மண்ணில் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக ஆஷஸ் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்த இங்கிலாந்து அணியை, அரச குடும்பம் கௌரவித்துள்ளது. இந்தத் தொடரில் அதிக ரன்கள் குவித்த அலஸ்டயர் குக் (766 ரன்கள்), 307 ரன்கள் சேர்த்த தலைவர் ஸ்ரோஸ் மற்றும் அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்த பயிற்சியாளர் ஆன்டி பிளவர் ஆகியோருக்கு இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் பிறந்த நாளையொட்டி, மன்னர் அரசாங்கத்தில் சிறப்பு கௌரவ பதவி வழங்கப்பட்டுள்ளது.**

**இது மிகப்பெரிய கௌரவம் என்றும், அனைத்து வீரர்களின் ஒருங்கிணைந்த ஆட்டத்தின் மூலமே தொடரை வெல்ல முடிந்தது எனவும் இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸ் குறிப்பிட்டார்.**

# அக்மலின் விருப்பம்

(கராச்சி)

கிரிக்கெட் அரங்கில் சிறப்பாகச் செயற்பட, துடுப்பாட்ட வரிசையில் முன்னதாக களமிறக்கப்பட வேண்டுமென பாகிஸ்தான் வீரர் உமர் அக்மல் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தற்போது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆறாவது வீரராக களமிறங்கி வருகிறேன். இதில் மாற்றம் கொண்டு வர வேண்டும். நான்காவது வீரராக களமிறங்க ஆசைப்படுகிறேன். இதன் மூலம என்னுடைய திறமையை வெளிப்படுத்தி, சாதித்துக் காட்டுவேன். பாகிஸ்தான் அணி நிர்வாகத்திடம் இது பற்றி எடுத்து கூறியுள்ளேன். அணியின் தேவைக்கு ஏற்ப ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாக். போட்டிகள் சிம்பாப்வேயில்

(கராச்சி)

பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளதால், அங்கு விளையாட வேண்டிய போட்டிகளை சிம்பாப்வேயில் நடத்த, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) திட்டமிட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) அட்டவணைப்படி வரும் அக்டோர்-நவம்பர் மாதங்களில், இலங்கை அணி பாகிஸ்தானில் மூன்று டெஸ்ட், ஒரு ருவெண்டி-20, ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க வேண்டும். ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளது.

இந்தப் போட்டிகளை இலங்கையில் நடத்தலாம் என, இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அதேபோல, அடுத்த ஆண்டு இங்கிலாந்து அணி, பாகிஸ்தானில் பங்கேற்க வேண்டிய போட்டிகளையும் இலங்கையில் நடத்தலாம் என்றும் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து பி.சி.பி. செய்தித் தொடர்பாளர் நதீம் சர்வார் கூறுகையில், இலங்கைக்கு எதிரான போட்டித் தொடரை, நாங்கள் சிம்பாப்வேயில் நடத்தலாம் என்று திட்டமிட்டுள்ளோம். ஏனெனில், இங்கு குறைவான செலவுகளே ஏற்படும் என்பதால், ஓரளவுக்கு பி.சி.பி.,க்கும் வருமானம் கிடைக்கும் என்றார்.

# டெஸ்ட் தொடரில் சாதிப்பார் முனாப்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை வெல்வதற்கு முனாப் பட்டேலின் பந்து வீச்சும் ஒரு காரணமாகும். எனவே தொடர்ந்து வரும் டெஸ்ட் தொடரில் அவர் இந்திய அணியின் வெற்றிக்குப் பக்கபலமாகத் திகழ்வார் என்று இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். முனாப் எப்பொழுதுமே அமைதியான வீரர். அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வயது குறித்து கவலைப்படாத ரென்னிஸ் வீராங்கனை லி நா



வயது குறித்துக் கவலை இல்லை. என்னால் இயன்றவரை தொடர்ந்து ரென்னிஸ் போட்டிகளில் விளையாட விரும்புகிறேன். இவ்வாறு லி நா கூறினார்.


கிராண்ட்ஸ்லாம் அரங்கில் முதன் முதலில் சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. பிரெஞ்ச் ஓபனில் சம்பியன் பட்டம் வென்றதை என்னால் நம்ப முடியவில்லை. மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இதன்மூலம் தொடர்ந்து நிறைய கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதிப்பேன் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது. பொதுவாக ஒருமுறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுவிட்டால், தொடர்ந்து நிறைய கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்ல வேண்டும் என்ற ஆசை ஏற்படத்தான் செய்யும்.

இந்த வரலாற்று வெற்றியின் மூலம் சீன மண்ணில் டேபிள் டென்னிஸ், பட்மின்ரன், கூடைப்பந்து, கால்பந்து வரிசையில் டென்னிஸ் போட்டிகளுக்கு அதிக மவுசு கூடும் என நம்புகிறேன்.

சீனாவில் இருந்து நிறைய டென்னிஸ் நட்சத்திரங்கள் உருவாக வாய்ப்பு உள்ளது.

# கடின பயிற்சியை மேற்கொண்டால் விம்பிள்டன் கிண்ணத்தை கைப்பற்றலாம்


கடின பயிற்சி மேற்கொள்ளும் பட்சத்தில் விம்பிள்டன் பட்டத்தை எளிதில் கைப்பற்றி விடலாம். எந்த ஒரு வீராங்கனையும் குறைத்து மதிப்பிடாமல், முழுத்திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் சுலப வெற்றி பெறலாம். இவ்வாறு பிரபல ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தெரிவித்தார். சமீபத்தில் பிரெஞ்ச் ஓபனில் சம்பியன் பட்டம் வெல்ல முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும், இத்தொடரில் எனது செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. தற்போது எனது கவனம் முழுவதையும் அடுத்து வரவுள்ள விம்பிள்டன் தொடர் மீது வைத்துள்ளேன். இதற்காக தீவிர பயிற்சி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளேன். ஏற்கனவே ஜஸ்டின் ஹெனின் ஓய்வு பெற்றுவிட்டார். தற்போது வோஸ்னியாக்கி, இவானோவிச் உள்ளிட்ட இளம் நட்சத்திரங்கள் மட்டுமே விளையாட இருப்பதால் கடுமையாகப் போட்டி அமையும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.



ஷரபோவா

# பாசையூர் புனித அ
# பெருவிழா சிறப்பு





## யாழ்.ஆயரின் ஆசிச் செய்தி



கோடி அற்புதர் என்றும், பதுவைநகர் புனிதர் என்றும் அழைக் கப்படும் எம் தூய அந்தோனியார் இவ் உலகில் வாழும் போதே புனிதராக வாழ்ந்து புதுமைகள் கோடி புரிந்தவர் மட்டுமல்ல, மாறாக இன்று உலகெங்கும் பக்தர்களை தன்னகத்தே கொண்டு இறைவனின் ஆசீர்களை வாரி வழங்கும் இப் புனிதர், தன் இவ் வுலக வாழ்வை முடித்து விண்ணக மகிமையைப் பெற்ற நாளை இன்று நாம் கொண்டாடுகின்றோம்.

ஏழைகள் மட்டில் இரக்கமும், அன்பும், எப்படியும் வாழ்ந்து எங்கள் காலத்தை முடித்து விடலாம் என்று எண்ணி வாழ்பவர்க்கு இப்படித்தான் வாழ்வை வாழ வேண்டும் என்று தன் வாழ்வில் ஒரு கோட்பாட்டை வகுத்து, வாழ்ந்து இறை நம்பிக்கையிலும், அன்பிலும் தன் வாழ்வை வாழ்ந்த புனிதர் இவர்.

அக்காலத்தில் பெயர் போன புனித பிரான்சிஸ்குவின் சபையியல் துறவியாக இணைந்து எளிமை, செபம், புனித வாழ்வை மேற்கொண்டார். தன்னைப் படைத்த இறைவனின் திருநாமத்தை புகழ்ந்து மறையுரைகள் வழியாக சத்திய வேதத்தைப் போதித்ததால் நாவழியாமல் இருக்க இறைவனால் அருள்பெறப்பெற்ற இப் புனிதர் இன்று எம்மையும் தம் பாதையில் இறைவனுக்கு விசுவாசம் உள்ளவர்களாக, தெய்வ பயம் உடையவர்களாக, பாவப் போக்கிலும் அதற்கான நாட்டங்களிலும் இருந்து விடுபட்டுத் தூய வாழ்வு வாழ அழைத்து நிற்கின்றார்.

எனவே, காலம் காலமாகத் தமது கிறிஸ்தவ விசுவாசத்தில் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து வாழும் எம் பாசையூர் பங்குத் திருச்சபையும் இன்று தம் பாதுகாவலரான தூய அந்தோனியாரின் விழாவைக் கொண்டாடும்போது அவர்களையும் நான் வாழ்த்தி தூயவரைப்போல இவர்கள் வாழ்வும் மற்றவர்களுக்கு முன்பாக இறைவனைப் பிரதிபலிக்க ஆசீத்து நிற்கின்றேன்.

**மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ்.மறைமாவட்ட ஆயர்,**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## முன்னாள் பங்குத்தந்தையின் வாழ்த்துச் செய்தி



அலை கடலின் தாலாட்டில் தம்மை அண்டி வரும் பக்தர்களுக்கு அருள்மாரி பொழியும் தூய அந்தோனியாரின் திருவிழாவை பக்தி வைராக்கியத்துடன் கொண்டாடி மகிழும் பாசையூர் பங்கின் பங்குத்தந்தைக்கும், பங்கு மக்களுக்கும் தூயஅந்தோனியாரின் பக்தர்கள் யாவருக்கும் திருநாள் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பதுவையின் நாயகனாம் பாலகன் இயேசுவைத் தன் கரங்களில் ஏந்திடப் பாக்கியம் பெற்றவர் எமது புனிதர். புதுமைகள் கோடி புரிந்து பக்தர்களின் நெஞ்சத்திலே நீங்கா இடம்பிடித்தவர். இறையரசை அடைந்திடும் வழியினை இறைமக்கள் கண்டடைய இயேசுவுக்குச் சான்று பகர்ந்தவர். திருச்சபை எமக்குத் தந்த புனிதர்களில் முதன்மை இடம் பிடித்தவர். எம்புனிதர் எமக்குக் காட்டிய வாழ்வுப் பாதையினைக் கடைப்பிடித்து இறையரசுக்குரிய மக்களாக வாழவும், எம்மைச் சூழ்ந்துள்ள இருளகன்று ஒளிமயமான சுதந்திர வாழ்வு எம் மக்களுக்குக் கிடைக்கவும், எம் புனிதர் வழியாக இறைவரம் வேண்டி அனைவரையும் வாழ்த்தி நிற்கிறேன்.

**அருட்பணி. ஏ.ஜே.யாவீஸ்.**
**முன்னாள் பங்குத் தந்தை.**

## புனித அந்தோனியாரின்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற்கூற்றில் பாசையூர் பகுதியில் கிறிஸ்தவர்கள் வாழ்ந் தார்கள் என்பதற்கு ஆவ ணச் சான்றுகள் இருந் திருக்கின்றன. இதற்கு பாசையூரில் உள்ள ஒரு சிறிய ஆலயம் பற்றிய குறிப்புகள் யாழ்.ஆயர் இல்லத்தில் உள்ள 1775 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கத்தோலிக்க மதத்தைத் தழுவிய போர்த்துக்கேயர் செப வழிபாடுகளை நடத்த ஒரு சிறிய குடிலை பாசையூரில் அமைத்தனர். அப்போதே அங்கு அந்தோனியார் சொரூபமும் எழுந்தருளியது.

1844 - 1845 களில் கோவா ஒறிற்ரோறியன் சபையைச் சேர்ந்த அருட்திரு.யோக்கீம் கபிரியேல் எனும் குருவின் முயற்சியாலும் கிராம மக்களின் ஆதரவினாலும் முருகைக் கல்லினால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

ஆனாலும் முன்னைய காலங்களில் வாழ்ந்த எம் முன்னோர்கள் கடல் கடந்து வத்தைகளில் சென்று பாலை மரத்தூண்கள் கொண்டு வந்து பெரும் சிரமங்கள் மத்தியில் ஆலயம் கட்டுவதற்கு எடுத்து வந்தனர். ஆனால் விக்டர் டெலாண்டெஸ்

அடிக…
வாக்கு…
38 அ…
13.10.…
னால்…
கொன…
மேற்கு…
இந்…
தாக…
ஆண்…
அடிக…






**மிலேன் சிற்றி**
**&**
**ரேடர்ஸ்**
**மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம்.**
பிறவுசிங், கணினிகேம், போட்டோப் பிரதி, பிறின்ரிங், வீடியோ கோல்ஸ்.
**மிலேன் சிற்றி**
24, சென்.அன்ரனீஸ் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.
**மிலேன் ரேடர்ஸ்**
21, சென்.செபஸ்ரியன் வீதி, பாசையூர்.
(C/753)



**கிளரேசியன் வெளியீட்டகம்**
ஆன்மீகப் புத்தகங்கள், பைபிள் டயறிகள், செபப்புத்தகங்கள், ஆங்கிலப் புத்தகங்கள், செபமாலைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். .
**கிளாரட் அகம்**
15, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2924.
**கிளரேசியன் வெளியீட்டகம்**
ராகம, வெலிசற.
தொ.பே: 011 2953434
(C/754)

**புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பாசையூர்**
கடற்றொழில் உபகரணங்கள், வலைகள் என்பன நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
**புனித அந்தோனியார் கோயிலடி, பாசையூர், யாழ்.**
(C/755)

**வீரசிங்கம் பல்பொருள் வாணிபம்**
சில்லறைப் பொருள்கள், சோடா வகைகள், இனிப்புப் பண்டங்கள், கேக் சாமான்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
**841, கடற்ரை வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.**
(C/756)

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்) குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் என்பவற்றைச் சுவைத்து மகிழ
**ஹொட்டல் றொலெக்ஸ்**



**340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 2808**
(C/769)


யாழ்ப்பாணத்தில் முதலாவது ஆடம்பர உல்லாச கலாசார குடும்ப உணவகம்.
*TASTE OF JAFFNA RESTAURANT*
**இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 1322**




(C/770)

**பி.ஜே.பர்**
☆ பல் கட்டுபவர் ☆
**எமது சிறந்த சேவைகள்:**
☆ கண் பரிசோதித்து
☆ பல் .கட்டுதல்.
☆ மிதப்புப் பற்களுக்
**542, ஆஸ்பத்திரி**
**யாழ்ப்பாணம்**
**தொ.பே: 077864**
(C/771)

# ...ந்தோனியார் ஆலய
# ... மலர் - 13.06.2011



## "ஆண்டவரை நாம் எக்காலமும் போற்றிடுவோம் அவர் புகழ் எப்போதும் எம் நாவில் உதிக்கும்"



ஆனி மாதம் என்று சொல்லுகின்றபோது எம் நினைவினிலே வருவது எம் கோடியற் புதரான புனித அந்தோனியாரின் திருவிழா தான் என்றால் அது மிகையாகாது.

எம் நெஞ்சமெல்லாம் கொள்ளைகொண்டு தீய கருத்துக்களைத் தகர்க்கும் சம்மட்டியாக தன் வாழ்விலே சிறந்து எம் பாசையூர் பதியினிலே எழுந்தருளியிருந்து தன்னைத் தேடி வரும் பக்தர்களுக்கெல்லாம் அருள்மழையினை வழங்கும் புனித அந்தோனியாரின் திருவிழாவிலே அனைத்துப் பக்த கோடிகளுக்கும் இறையாசி வேண்டி நிற்பதை முன்னிட்டு மகிழ்கிறேன்.

கரங்களிலே இயேசுபாலன் தவழும் பாக்கியம் பெற்ற எம் புனிதர், தன்னை நாடி வரும் உள்ளங்களிலும், இல்லங்களிலும் இயேசு ஆண்டவரைத் தாங்கும் பாக்கியத்தைப்பெற புனித அந்தோனியார் எம் அனைவருக்காக இறைவனிடம் பரிந்துரைப்பாராக.

மேலும், புனித அந்தோனியாரின் திருவிழா சிறப்புற அமைவதற்கு அனைத்து வழிகளிலும் உதவிக்கரம் நீட்டியவர்களை அன்புடன் நினைவு கூருகின்றேன்.

அத்துடன், எம் இனிய உறவுகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்திலே வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கி நிற்கின்றேன். கோடி அற்புதரான புனித அந்தோனியார் உங்கள் தேவைகளில் அருகிருந்து உங்களுக்காய் இறைவனிடம் பரிந்துரைப்பாராக.

**அருட்திரு. செ.றோய் பேடினன்,**
**பங்குத் தந்தை,**
**புனித அந்தோனியார் ஆலயம் - பாசையூர்.**

## "இறையருள் ஒன்றே எம்மை கரம்பற்றி நடத்த வல்லது"



யாழ்.நிலப்பிரப்பில் நீண்டகாலம் வாழ்ந்த வரலாற்றில் தடம் பதித்திட்ட கடலலை தவழும் பாசையூர் மண்ணின் பாதுகாவலராம் அந்தோனியாரின் குடியிருப்பு ஆண்டவரின் ஆசீரும், அருளும் பெற்ற வணக்கத்துக்குரிய திருத்தலமாகும் என்று கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இத்திருத்தலத்தின் சிறப்பும், பெருமையும் இங்குள்ள மக்களின் நல்வாழ்வும் நீண்டு, நிலைத்து நிற்பதற்குக் காரண கர்த்தவாக இருப்பவர் இறைவனே. புனித அந்தோனியார் தாமே எமக்காக இறைவனிடம் பரிந்து பேசுகிறார். இத்திருத்தலத்துக்கு வருகின்ற அனைவருக்கும் புனித அந்தோனியாரின் அருட்கொடைகள் நிறைவாகக் கிடைக்க ஆசிக்கின்றேன்.

புனிதரிடம் எமது தேவைக்காக மட்டும் செல்லாது, புனிதரின் போதனைகளைக் கேட்டு, அதன்படி வாழ்ந்து இறைவனை எம் வாழ்வில் கண்டுகொள்ள வேண்டும். இதற்காகவே புனித அந்தோனியார் எம்மை அழைக்கிறார்.

அத்தோடு, எமது உள்ளங்களிலும், இல்லங்களிலும் சிறப்பாக எமது நாட்டிலும் நீதியின்முன் கட்டுண்டு கிடக்கும் சமாதானம் மலர அந்தோனியார் வழியாக இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

இந்த நல்ல நாளிலே புனித அந்தோனியாரின் திருநாள் வாழ்த்தையும் ஆசியையும் கூறி நிற்கின்றேன்.

"என் அருள் உனக்குப் போதும்"

**அருட்பணி.ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம்,**
**குருமுதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## ...ன் திருத்தல வரலாறு

அடிகளார் தூண்கள் அற்ற நவீன முறையிலான ஆலயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்த வகையில் 106 அடி நீளமும், 38 அடி அகலமும் கொண்ட ஆலயம் ரூபா 20 ஆயிரம் செலவில் 13.10.1911 ஆம் ஆண்டளவில் விக்டர் டெலான்டெஸ் அடிகளாரினால் பூர்த்தி செய்யப்பட்டது. அவர் மேல் அளவு கடந்த அன்பு கொண்ட மக்கள் அவர் இறந்த பின்பு அவரது உடலை ஆலயத்தின் மேற்குப் பக்கமாக உள்ள கோவிற் பகுதியில் அடக்கம் செய்தனர். இந்த ஆல[illegible] உரோமைய கட்டடக் கலை அமைப்பைக் கொண்டதாக வளைவுகள், விறாந்தைகள் அதிகம் கட்டப்பட்டன. 1935 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த து.எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் முயற்சியினால் ஆலயத்தின் முகப்பில் வானுயர இரண்டு கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. இதற்காக கொழும்பிலிருந்து வோக்கஸ் கம்பனியினர் அழைக்கப்பட்டு அவர்கள் இக்கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்தனர். ஆலயத்தில் காணப்படும் சிங்காசனமானது வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்து என்னும் சிற்பக்கலை வல்லுநரால் வடிவமைக்கப்பட்டது. மேலும் இவராலேயே 1950 ஆம் ஆண்டு இன்று காணப்படும் சிங்காரத் தேரும் வடிவமைக்கப்பட்டது. அத்துடன் ஆசந்தியும், அந்தோனியார் எழுந்திருளி இருக்கும் இருப்பிடமும் வடிவமைக்கப்பட்டது. சிங்காசனத்தில் நடுவே இருக்கும் பிரமாண்டமான அந்தோனியாரின் திருச்சொரூபமும் உரோமிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். கலையுருவாய் விளங்கும் பலிப்பீடமும், கண்களையும் கருத்தையும் உணர்த்தும் சிங்காசனமும் து.எமிலியானுஸ்பிள்ளை, பி.பஸ்ரியாம்பிள்ளை அடிகளார்களின் கலைத்தத்துவத்தால் பிறந்த இரண்டைப் படைப்புகள் ஆகும். மேலும் இவர்களே இவ்வாலயத்திற்கு மின்சார விளக்கினை ஏற்றிய பெருமையையும் கொண்டவர்களாவர். இந்த ஆலயத்துக்கு என வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மணிகள் இக்கோவிலுக்குப் பொருத்தப்படாமல் ஆசனக் கோயிலுக்கு மாற்றப்பட்டு, இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மணிகளில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் என எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது. திருச்சிலுவையின் மகிமையைப் பிரதிபலிப்பாதாக ஆலயத்தில் உள்ள சிலுவைப்பாதைப் படங்கள் பெல்ஜியம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். 1942-1945 இடைப்பட்ட காலத்திலேயே எஸ்.ஜே.அல்போன்சஸ் அடிகளார் இன்று காணப்படும் வானுயர இருந்து ஊருக்கு உவகை அளிக்கின்ற மணிக்கூட்டுக் கோபுரத்தையும் அமைத்தார். பிற்பட்ட காலங்களில் தான், அதாவது 1989 ஆம் ஆண்டளவில் பிரான்சிஸ் அடிகளாரினால் புனித வின்சன் டி போல் சபையினரின் விற்பனைக்காக ஓர் செபமாலை விற்பனை நிலையம், மெழுகுவர்த்திக் கடைகள் என்பன அமைக்கப்பட்டன. இவ்வாறு பல்வேறு காலங்களில் பல்வேறு அமைப்பு முறைகளைக் கொண்டதாக புனிதருக்கு எழுதப்பட்ட இந்த ஆலயம் ஒவ்வொரு வருடமும் ஆனி 13ஆம் திகதி திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆலய மக்களின் பக்தி மேன்மையினால் இத் தாலியின் பதுவை நகரில் இருந்து புனிதரின் திருவுடல் கடந்த வருடம் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டதும் ஆலயத்துக்குக் கிடைத்த பெருமையாகும்.

இன்று புனிதரின் திருவிழாவைக் காண அலை மோதும் காட்சியும், தேர்ப்பவனியும் கண்கொள்ளாக் காட்சியாகும். எனவே புனிதரின் ஆசீரையும், பரிந்துரையையும் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**எம்.ஞானகீதன், பாசையூர்,**
**யாழ்ப்பாணம்.**


### மதுமாதா வெல்டிங் வேக்ஸ் & கேபிள் விஷன்

(C/758)

உங்கள் வீடுகளுக்குத் தெளிவான கேபிள் இணைப்புக்களைப் பெற, நேரடியாக வந்து கேபிள் இணைப்புக்கள் செய்துதர எம்மை அழையுங்கள். அத்துடன் மின் ஒட்டு வேலைகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

**இல. 957/10 சென்.ஜோசப் வீதி, வளன்புரம், பாசையூர்.**

### தேவராசா ரெம்சி பல்பொருள் வாணிபம்

சகல விதமான சமையல் பொருட்கள், உணவுப் பண்டங்கள், சவர்க்கார வகைகள், பால்மாப் பைக்கற்றுக்கள், சோடா வகைகள், தானிய வகைகள், பழரசங்கள், பழங்கள் அத்துடன் மேலும் நானாவிதப் பொருட்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்.

**2ஆம் குறுக்குத் தெரு, பாசையூர், யாழ்பாணம்.**

(C/757)

### கொண்சன் சுயாதா பல்பொருள் வாணிபம்

நானாவிதப் பொருட்கள் மற்றும் கேக் சாமான்கள், பழ வகைகள், சோடா வகைகள், சமையல் பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுகள்.

**46, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 4906766**

(C/759)

### LUCKY STORES

அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப்பொருட்கள் என்பவற்றைத் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுகள். எம்மிடம் றீலோட் மற்றும் கிற்காட் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளாம்.

**இல. 46, சென்.செபஸ்ரியன் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.**

(C/760)

### ...ர்னாண்டோ

☆ கண் பரிசோதனையாளர்

...கள்:
...த்து கண்ணாடி வழங்குதல்.
...ளுக்குக் கிளிப் பொருத்துதல்.
...திரி வீதி,
...ணம்.
...778643992

கேக் வகைகள், பாண், பணிஸ் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு, விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் என்பவற்றை ஓடருக்குச் செய்வதற்கு நாட வேண்டிய ஒரே இடம்.

### குமார் பேக் ஹவுஸ்

**சென்.செபஸ்ரியன் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.**

(C/780)

### C.L.பல், மூக்குக் கண்ணாடியகம்

மிதப்புப் பற்களுக்கு உறுதிமிக்க பற் கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளலாம். போட்டோக் கட்டிங், விற்றிங் மூலம் விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**58, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 8893**

(C/781)

## அதிகரித்து அறவிடப்பட்ட வாகன பாதுகாப்புக் கட்டணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கால்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிகளைப் பார்வையிட சென்றவர்களிடம் வாகன பாதுகாப்பு கட்டணம் அதிகரித்து அறவிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கு என பயன்படுத்தும் ரிக்கட்டுக்களே சைக்கிள்களுக்கு வழங்கப்பட்டு அதிக கட்டணம் அறவிடப்பட்டது.

மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்கிய ரிக்கட்டில் பொறிக்கப்பட்டதொகையை விட 10 ரூபா அதிகரித்தே அறவிடப்பட்டது.

இதுபற்றி பலர் அவர்களிடம் விளக்கம் கேட்டு முரண்பட்டனர். ஆயினும் ரிக்கட் வழங்கியவர்கள் உரிய பதில் எதனையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் படைமுகாம்களிலிருந்து வெளியேறும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பல முகாம்களில் நடைபெற்றது. திருகோணமலை சேருவிலவிலுள்ள படை முகாமொன்றில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் ஒரு பகுதியினரின் அணிவகுப்பையும் அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவதையும் காணலாம்.

# அவசரகாலச்சட்டத்தை தளர்த்துவதாக கூறி பொதுமக்களை ஏமாற்றுகிறது அரசாங்கம்

## குற்றஞ்சாட்டுகிறார் விஜிதஹேரத் எம்.பி.

(கொழும்பு)

அவசர காலச்சட்டத்தைத் தளர்த்தப் போவதாகக் கூறி அரசாங்கம் பொதுமக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் பெரும்பாலான ஊடகங்கள் வாயிலாக அவசர காலச் சட்டத்தை தளர்த்தப் போவதாக அரசாங்கம் மேற்கொள்ளும் பிரசாரங்களில் எள்ளளவும் உண்மையில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

திவயினப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் மேற்கண்ட விடயங்களை முன்வைத்துள்ளார்.

கடந்த காலங்களில் அவசர காலச் சட்ட விதிகளைத் தளர்த்தப் போவதாக ஊடகங்கள் வாயிலாக அரசாங்கம் பெருமெடுப்பில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மகாநாடொன்றின் போதும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதுபற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி சட்டமாஅதிபரே கூட அவசர காலச்சட்டத்தை தளர்த்துவது குறித்து ஊடகமொன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.



ஆனாலும் அரசாங்கம் அவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஒருபுறத்தில் பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டு மறுபுறத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக அவசர காலச்சட்டத்தை நீடித்துக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் அவசர காலச்சட்டத்தை நீக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் அடியோடு இல்லை என்பதையே அது புலப்படுத்துகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை - இந்திய உறவினை சீர்குலைப்பதற்கு சூழ்ச்சியாம்

### – என்கிறது திவயின

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவுகளைக் கெடுப்பதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் இந்த தகவல்களின் அடிப்படையில், இதன் பின்னணியில், பிரிவினைவாதத்திற்கு உதவிய வெளிநாட்டு சக்திகளும், புலம்பெயர் தமிழர்களும் இருப்பது தெரிய வந்துள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

இந்தச் சக்திகள் தமிழக அரசாங்கத்தின் ஊடாக இந்திய மத்திய அரசாங்கத்திற்கு இலங்கை தொடர்பில் பல்வேறு அழுத்தங்களை கொடுக்க முயற்சித்து வருகின்றன. இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்குமாறு தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றியதும் இந்த சக்திகளின் சூழ்ச்சியாக இருக்கலாம்.

எவ்வாறாயினும், இரண்டு நாடுகளும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவதாக இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான பிரதிநிதிகள், இந்திய உயர் மட்டப் பிரதிநிதிகளுடன் மிகவும் தொடர்புடன்கூடிய பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சர் கூறியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

## உறவுகளைப் பலப்படுத்தவெனத் தெரிவித்து

# கடற்படையின் 42 கொமாண்டோக்கள் இந்தியாவிற்கு இரகசியப் பயணம்



(கொழும்பு)

கடற்படையின் சிறப்புப் படைப்பிரிவைச் சேர்ந்த 42 கொமாண்டோக்கள் இந்தியாவுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்திய- இலங்கை கடற்படைகளுக்கு இடையிலான உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாவே இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கடற்படைக் கொமாண்டோக்கள் மும்பை அனைத்துலக விமான நிலையத்தை சென்றடைந்துள்ளனர்.

எனினும் இதுதொடர்பாக இரு நாட்டு அரசாங்கங்களும் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

தீவிரவாத அச்சுறுத்தல்களை முறியடித்தல், சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிரச்சினையைச் சமாளித்தல் உள்ளிட்ட விவகாரங்களில் இணைந்து செயற்படுவதற்காக உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவே இலங்கை கடற்படை கொமாண்டோக்கள் இந்தியா சென்றுள்ளனர்.

தமது பயணத்தின் பிரதான நோக்கம் இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையில் பலமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதே என்று மும்பை விமான நிலையத்தில் வைத்து இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாம் இந்தியாவில் எந்தவொரு கூட்டு நடவடிக்கையிலும் ஈடுபடப் போவதில்லை என்று தனது பெயரை வெளியிட விரும்பாத அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்திய அதிகாரிகளுடன் இணைந்து பல முக்கியமான இடங்களுக்கு செல்லவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மும்பையில் இந்தியக் கடற்படை அதிகாரிகளுடன் சில நாட்களை செலவிட்ட பின்னர், கோவா மற்றும் சென்னைக்குச் செல்லவுள்ளதாகவும், எதிர்காலத்தில் முக்கியமான இடங்களில் விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் நிகழாமல் தடுப்பது பற்றி இதன்போது ஆராயப்படும் என்றும் அந்த கடற்படை அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

சோமாலியக் கடற்கொள்ளையர்களுக்கு இலங்கை கடற்படை, எரிபொருள நிரப்பவும், மீள் ஒழுங்கு செய்யவும் இடமளித்து உதவி வருவதாகச் செய்திகள் வெளியானதை அடுத்து இருநாட்டுக் கடற்படைகளுக்கும் இடையில் பதற்றமான சூழல் உருவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது

# இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளில் பெருமளவானோர் வெட்கமற்றவர்கள்

### – இப்படிக் கூறுகிறார் குணசேகர

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் வெட்கமற்றவர்கள் என சிங்கள தேசியவாத கடும்போக் குடைய பிரபல சட்டத்தரணி எஸ்.எல். குண சேகர விமர்சித்துள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அசம்பாவிதங்கள் மற்றும் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையின் தாக்கம் என்பன குறித்து நேற்றைய சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்த விசேட நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இலங்கையில் இருக்கும் அரசியல் வாதிகள் நாட்டை நாசம் செய்யவே அவதரித்தவர்கள் நாட்டுக்கு என்னதான் கெடுதி நடந்தாலும் பரவாயில்லை, தான் மட்டும் நன்றாக் இருந்தால் போதுமென்று நினைக்கும் பண்பைக் கொண்டவர்கள்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் மூலம் தமக்கு சாதகமான சூழ்நிலையொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியுமா என்று கூட சில அரசியல்வாதிகளின் சிந்தனைகள் செயற்பட்டிருந்தன. அதில் ஆளும்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு என்ற பேதம் இருக்கவில்லை. புலிகளின் சிந்தனை களை அப்படியே உள்வாங்கிக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருப்பதும் அப்படியான ஒரு சம்பவமாக நோக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சம்பிரதாயமாக சந்தித்த இந்தியக்குழு

(கொழும்பு)

கொழும்பு வந்த இந்திய அதிகாரிகள் குழு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சம்பிரதாயபூர்வமாகவே சந்தித்தது. உண்மையான பேச்சுக்கள் ராஜபக்ஷ சகோதர்களுடனேயே நடத்தப்பட்டதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், தமிழ்நாடு முதல்வரைச் சந்திக்க புதுடில்லியில் இருந்து சென்னைக்கு சென்ற சிறப்பு விமானத்திலேயே சிவ்சங்கர் மேனன், நிருபமா ராவ், பிரதீப் குமார் ஆகியோர் கொழும்பு வந்தனர்.

இந்தியக் குழுவுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை அரசாங்கம் செங்கம்பள வரவேற்பு அளித்திருந்தது.


இந்தக் குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் நீண்ட பேச்சுக்களை நடத்தினர்.

இந்தக் குழுவினர் வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் குறுகிய நேரத்தையேச் செலவிட்டிருந்தனர். அவருடனான பேச்சுக்கள் வெறுமனே சம்பிரதாயபூர்வமான அலங்காரச் சந்திப்பாகவே நடந்தது.

27) A பயணச் சீட்டுப் பெறுதல்　　B பொதிகளை இருக்கையில் மேல் பொதிவைக்கும் இடத்தில் வைத்தல்
C புகையிரத நிலையம் செல்லல் D ஆசனத்தில் அமர்தல்

1) C,A,D,B　　2) C,A,B,D　　3) A,C,B,D

28 பின்பு அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப சரியான வரிப்படத்தை தெரிவு செய்க




1) வடக்கு நோக்கிச் செல்க　　2) பின்பு கிழக்கு நோக்கிச் செல்க
3) பின்பு வடக்கு நோக்கிச் செல்க　　4) பின்பு மேற்கு நோக்கிச் செல்க

29. பின்வரும் வீதி சமிக்ஞை மூலம் குறிப்பிடப்படுவது யாது?




1) முன்னால் சிறுவர் கடவை　　2) முன்னால் பாதசாரிகள் கடவை
3) முன்னால் பாதை வேலை

30. 

மூன்று வகையான மண் மாதிரிகள் சம அளவில் எடுத்து புனலினுள் பஞ்சு இடப்பட்டு புனலில் சம அளவான மண் A,B,C போத்தலில் இடப்பட்டது எனின், C புனலில் இடப்பட்ட மண் யாதாக இருக்கும்?


31. அருகில் தரப்பட்ட படத்தில் காட்டப்பட்டது போன்று நீர் கொண்ட முகவை ஒன்றில் தடி ஒன்றில் வெவ்வேறு பகுதியில் காட்டப்பட்டவாறு நீர்கொண்ட முகவவையில் தடிவைக்கப்பட்டது எனின், A,B,C என்ற வித்துக்களில் எவ்வித்து நன்கு முளைத்திருக்கும்?




32. பொருத்தமற்ற தொடர்பினைத் தெரிவு செய்க


A) புலன்கள் - உணர்ச்சிகள்　　B) நாடகம் - கதாபாத்திரம்
C) கிராமம் - தொழிற்சாலைகள்

1) A மட்டும　　2) B மட்டும்　　3) C மட்டும்

33. 

இவ் மணிக்கூட்டில் காட்டும் நேரத்தை தளவாடி ஒன்றினூடாகப் பார்க்கும்போது காட்டும் நேரம் யாது?

1) 9 மணி　　2) 3 மணி　　3) 12 மணி 45 நிமிடம்

34. 

இவ் வெண் உருவில் மூன்று விளையாட்டிலும் பங்கு பற்றியவர்களைக் குறித்து நிற்கும் இடத்தை நிறந்தீட்டிக் காட்டுக.

35. 8 மாடுகள் 8 சாக்கு புல்லை 8 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு மாடு 8 சாக்குப் புல்லைத் தின்று முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?　1) 8 நாட்கள்　2) 64 நாட்கள்　3) 1 நாட்கள்

36. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைகின்றது. அதனைத் தெரிவு செய்க


1) கத்தி　திகதி　கல்வி　விடுதி
2) வீதி　திகதி　திம்பு　புதல்வ
3) சங்கு　குளவி　குழந்தை　தையல்

37. அகர வரிசையில் சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குரிய கருத்தை இலகுவில் விளக்கும் நூல் எது?

1) அகராதி　　2) அரிச்சுவடி　　3) நிகண்டு

38. 1 வாரம் 2 நாள் 4 மணித்தியாலங்களை மணித்தியாலத்தில் தருவது எது?

1) 220 மணித்தியாலங்கள்　　2) 420 மணித்தியாலங்கள்　　3) 7 மணித்தியாலங்கள்

39. 


அருகில் தரப்பட்ட தராசுத் தட்டுக்கள் சமநிலை அடைவதற்கு பாரம் குறைந்த தட்டில் வைக்க வேண்டிய நிறையைத் தெரிவு செய்க

1) 759 g　2) 15000g 2 kg　3) 500g, 1 Kg, 2Kg　3) 400g,3000g,800g

40. சித்திரை மாதம் 3 ஆம் திகதியிலிருந்து வைகாசி மாதம் 13 ஆம் திகதி வரை உள்ள நாட்கள்

1) 35 நாட்கள்　　2) 41 நாட்கள்　　3) 40 நாட்கள்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
வினாக்கள்

# கல்வி முரசு

வெளியீடு 18



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

**பழவகைகள் பலவற்றின் விலை கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 4 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**



| | | | |
|---|---|---|---|
| ரூ.20 | ரூ.16 | ரூ.12 | ரூ.28 |

1. அப்பிள் ஒன்றினதும், தோடம்பழம் ஒன்றினதும், பப்பாசி ஒன்றினதும் மொத்த விலை யாது?

1) ரூ. 38　　2) ரூ. 34　　3) ரூ. 22

2. மாம்பழம் ஒன்றினதும், பப்பாசி ஒன்றினதும் மொத்த விலை யாது?

1) ரூ.32　2) ரூ.16　　3) ரூ.12


3. மேலே தரப்பட்ட பழங்களில் ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு பழம் வாங்கச் செலவாகும் பணம் யாது?




1) ரூ. 22　　2) ரூ. 34　　3) ரூ.44

4) ஆறு அப்பிள் பழங்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை தோடம்பழங்கள் வாங்கலாம்?

1) 05　　2) 06　　3) 08

வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




1) 　2) 　3) 


6) குடைகள் கறுப்பு நிறத்துணிகளால் ஆக்கப்பட்டிருப்பதன் காரணம்


1) கறுப்பு நிறம் சூரிய ஒளியை உறிஞ்சும்
2) கறுப்பு நிறம் குளிர்மையானது
3) கறுப்பு துக்கத்தைக் குறிப்பதால்

7) துருப்பிடித்தல், தகனம், சுவாசம் மூன்றிற்கும் பயன்படும் வாயு


1) ஐதரசன்　　2) ஒட்சிசன்　　3) காபனீரொட்சைட்

8) வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





9) ஒவ்வொரு உருவிலும் முழு உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.



$\frac{1}{4}, \frac{1}{3}, \frac{1}{4}$   2) $\frac{1}{8}, \frac{1}{8}, \frac{1}{4}$   3) $\frac{1}{4}, \frac{1}{8}, \frac{1}{4}$


10) ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது?

1) தெற்கு   2) தென்மேற்கு   3) கிழக்கு


11) ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோ கிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோ கிராம் ஆகும். எனின், சுரேஸின் நிறை யாது?

1) 15 Kg   2) 68 Kg   3) 23 Kg

12) முகவையொன்றினுள் நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை மூன்றையும் கலக்கி விடப்பட்டபோது மூன்றும் வெவ்வேறாகப் பிரிந்த தனித்தனி படையாகக் காணப்பட்டது. இதில் B படை யாதாக இருக்கலாம்?




1) நீர்   2) தேங்காயெண்ணெய்   3) மண்ணெண்ணெய்

13) 


200 மீற்றர் சுற்றுவட்டத்தைக் கொண்ட நீள்வட்ட மைதானம் இருவாகும். இதில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தை ஓடி முடிக்க வேண்டுமாயின், எத்தனை தடவைகள் இந்த மைதானத்தைச் சுற்றி ஓடவேண்டும்.   1) 5   2) 2   3) 3

கீழே அட்டவணையில் 0 தொடக்கம் 9 வரையான ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள 14 தொடக்கம் 16 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | A | P | M | S | V | R | B | D | E |

14) AP + RB + VK = ..............................

1) ABK   2) APE   3) EPA

15. SVP - PDK = ..................................

1) PAB   2) MVE   3) ABP

16. MRB x V = ..................................

1) ADMV   2) VDAV   3) ADVM


17 ஒருவருக்கு தீ விபத்து ஏற்படும்போது அவ்விபத்துக்குள்ளானவர் உடனடியாகச் செய்யவேண்டியது

1) நீர்இருக்கும் இடத்தைத் தேடி ஓட வேண்டும்.
2) நிலத்தில் படுத்து உருள வேண்டும்.
3) வேகமாக ஓட வேண்டும்.

18. குமாரின் வயது 15. கமல் குமாரிலும் 7 வயது மூத்தவன். ராஜா கமலிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் ராஜாவின் வயது என்ன?


1) 22   2) 27   3) 39



19. 


அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

1) 7l. 800 ml   2) 6l. 200ml   3) 5l. 200ml

20. 



பெட்டியினுள் தரப்பட்ட உருவில் யு வட்டத்துக்கு டீ வட்டத்திற்கும் பொதுவான இலக்கங்கள் யாவை?

1) 5.3   2) 4.2   3) 1.6

21. காகம் ஒன்று தனது அலகில் வடையுடன் அமர்ந்திருந்தது. அவ்வழியே வந்த நரி அதனைக் கண்டதும் காகத்திடம் வடையை அபகரிக்க எண்ணியது. காக்கையாரே காக்கையாரே நீர் இனிமையாகப் பாடுவீர். ஒரு பாட்டுப்பாடு என்றது. காகம் வடையை தனது கால்களுக்கிடையே வைத்தபடி கா கா என்ற கரைந்தது. நரி வெட்கத்துடன் சென்றது. இக்கதையில் இருந்து புலப்படும் கருத்து யாது?


1) காகம் நரியைக் கண்டால் கரையும்
2) பிறரை வஞ்சிக்க நினைப்பவர்கள் தாமே ஏமாறுவார்கள்
3) நரிக்கு வடை என்றால் மிகவும் விருப்பம்

22. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரேநேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?





1) A தட்டில் உள்ள மெழுகுதிரி   2) B தட்டில் உள்ள மெழுகுதிரி
3) A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது

23




மேலே தரப்பட்ட உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரவேண்டிய உருக்கோலத்தை தெரிவுசெய்க


1)


2)


3)

24) விதை பழத்திற்கு வெளியே அமைந்துள்ள தாவரம்?

1) தென்னை   2) மரமுந்திரிகை   3) அன்னாசி

25) பின்வரும் ஒவ்வொரு புதரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

இது மூன்று எழுத்துகளைக் கொண்ட சொல்லாகும். முதலெழுத்து தாலியில் உண்டு வாலியில் இல்லை. இரண்டாம் எழுத்து காம்பில் இல்லை கம்பில் உண்டு. மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடமியில் இல்லை (...................................)

26) கீழ்வரும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும் பொழுது பந்தியொன்றினைப் பெறமுடியும். அச்சரியான விடையைத் தெரிவுசெய்க.

A அங்கே ஓர் ஆமையைப் பிடித்தது.   B ஒரு நாள் ஒரு ஓநாய் பசியால் எங்கும் அலைந்தது
C அவ்வாமையை தன் கூரிய பற்களால் கடித்தது.   D கடைசியாக ஒரு குளக்கரைக்கு வந்தது.

1) C,B,A,D   2) B,D,A,C   3) B,A,D,C

# இந்தியப் பத்திரிகைகளிலிருந்து...

## சூடாறிய ஜெயலலிதா



இலங்கை தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருக்கும் கடும் தொனியிலான கருத்துக்கள் இந்திய மத்திய அரசாங்கத்தை கவலையடையச் செய்துள்ளது. போர்க்குற்றங்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் மீது விசாரணையை ஐ.நா. ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுக்க வேண்டுமென மாநில சட்டசபையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த சில நிமிடங்களுக்குள் சென்னைக்கான தனது விமானப்பயணத்திற்கு வெளிவிவகார செயலாளர் நிருபமாராவ் பயணப் பதிவை மேற்கொண்டிருந்தார். டில்லியின் இலங்கைக் கொள்கை தொடர்பான பாதைக்கு ஜெயலலிதா வரவேண்டுமென அவருக்கு நம்பிக்கையூட்டுவதற்காக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

டில்லியின் இலங்கை தொடர்பான கொள்கையானது சீனாவுக்கான வாசலாக இலங்கை வருவதை முன்தள்ளிவிடக்கூடாது என்பதாகக் கருதப்படுகிறது. வியாழக்கிழமை இரவு நிருபமாராவ் சென்னையை வந்தடைந்திருந்தார். அத்துடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனிடமிருந்து துரிதமான பிரதிபலிப்பு வெளிப்பட்டிருந்தது. கச்சதீவை திரும்பப் பெற்றுக கொள்வதற்காக உச்சநீதிமன்றத்தில் 2008 இல் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் ஜெயலலிதா மனுத்தாக்கல் ஒன்றைச் செய்திருந்தார். அந்த வழக்கிற்கு வலுவூட்டும் வகையில் மற்றுமொரு தீர்மானமொன்று வியாழக்கிழமை தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்படவிருந்த போது விசேட விமானத்தில் சென்னைக்கு மேனன் சென்றிருந்தார்.

மேனன் 45 நிமிடங்கள் ஜெயலலிதாவுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். காத்துக் கொண்டிருந்த ஊடகங்களுக்கு ஒரு வார்த்தை தானும் தெரிவிக்காமல் ஜெயலலிதாவின் வாசஸ்தலத்தை விட்டுச் சென்றிருந்தார். மேனன் புறப்பட்டுச் சென்ற பின்னர் மாநில அரசாங்கம் ஊடக அறிக்கையொன்றை விடுத்திருந்தது. அந்த அறிக்கையில் இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான ஐ.நா.விசாரணைக்கான வலியுறுத்தல் குறித்தோ அல்லது கச்சதீவை திரும்பப் பெறுவது தொடர்பாகவோ எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்களின் புனர்வாழ்வு தொடர்பாகவும் கச்சதீவை அண்மித்த பகுதிகளில் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி இடம்பெறும் தாக்குதல் குறித்துமே முதலமைச்சர் தனது கவலைகளை மேனனிடம் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*- டெக்கான் குரோனிக்கிள்.*

## அசலுக்கு இல்லை புகழ்!

அண்ணா ஹசாரேவின் உண்ணாவிரதப் போராட்டம் மூன்று நாள் நடந்தது. நாடே கொந்தளிப்பது போன்ற ஒரு மாயையை அப்போது ஆங்கில டி.வி.சனல்கள் உருவாக்கின. அந்த மாயையில் அடுத்து பத்திரிகைகளும் சிக்கின.

அடுத்தபடியாக யோகா வணிகர் பாபா ராம்தேவின் உண்ணாவிரதப் போராட்டத்தின் போதும் அதேபோன்ற ஒரு மாயையை உருவாக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை.

இரண்டுக்கும் நடுவில் மேதா பட்கர் எட்டு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அதை இதே ஆங்கில டி.வி. சனல்களும், பத்திரிகைகளும் கண்டுகொள்ளவே இல்லை. ஒப்புக்கு ஒரு வரி செய்தி சொல்லி விட்டுவிட்டன. காரணம் மேதா பட்கரின் உண்ணாவிரதம் மும்பையில் கோல்பார் பகுதியில் 24 ஆயிரம் குடிசைவாசிகளை அகற்றி நிலத்தை தனியார் ரியல் எஸ்டேட்காரர்களுக்குத் தருவதைக் கண்டிப்பதாகும். அதில் மேட்டுக்குடி மீடியாவுக்கு அக்கறையில்லை. ஆனால் மேதாவின் உண்ணா விரதம்தான் ஜெயித்தது. காரணம் மக்கள் அவரோடு திரளாக இருந்ததுதான். மகாராஷ்டிர அரசு மேதாவின் கோரிக்கைகளை ஏற்று விசாரணைக்கு உத்தரவிட்டது.

அரசியல்வாதிகள் மட்டுமல்ல, மீடியாவும் பத்திரிகைகளும் கூட திருந்த வேண்டியிருக்கிறது. அசல் பிரச்சினைகளை விட்டுவிட்டு போலியானவற்றுக்கு முக்கியத்துவம் தருவது மக்களுக்கு இப்போது புரிய ஆரம்பித்து விட்டது.

*- கல்கியில் ஞாநி.*

## ஜேர்மனியில் ஒரு ஞானோதயம்!

“மேற்படிப்புக்காக ஜேர்மனி செல்கின்றோம்” என்ற தகவல் உறுதியானதும், என் மனத்தில் விதவிதமான கனவுகள் வந்தன. உலகப் புகழ்பெற்ற பென்ஸ், பி.எம்.டபிள்யூ போன்ற மோட்டார் நிறுவனங்கள், புகழ்வாய்ந்த எலெக்ட்ரிக்கல் கம்பெனியான சீமென்ஸ் என பலதரப்பட்ட தொழிற்சாலைகள் கொண்ட ஆடம்பரமான நாடாக இருக்குமென எண்ணியிருந்தேன்.

நானும், சில நண்பர்களும் ஹேம்பர் சென்றவுடன் எங்களை அழைத்துச் செல்ல ஜேர்மனிய மாணவர் ஒருவர் வந்திருந்தார். அன்று இரவு எங்களுக்கு வரவேற்பு விருந்து கொடுப்பதற்காக, உணவுவிடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் சென்றபொழுது மிகச் சிலரே உணவருந்திக் கொண்டிருந்தனர். வயதான இரண்டு பெண்மணிகளும் அங்கிருந்தனர். என் நண்பர் உணவுக்கு ஓடர் செய்தார். நாங்கள் சாப்பிடத் தொடங்கினோம். ஓடர் செய்த அனைத்தையும் சாப்பிட முடியாததால் கால் பகுதிக்கு மேல் தட்டுகளில் மிச்சம் வைத்துவிட்டுக் கிளம்பினோம்.

எங்கள் கார் அருகே வரும் பொழுது அந்த வயதான பெண்மணிகள் எங்களைப் பற்றி அங்கிருந்த மனேஜரிடம் புகார் செய்து கொண்டிருந்தனர். எங்களுக்கு ஒன்றும் புரியாததால் என்ன விஷயம் என விசாரித்தோம். உடனே அவர்கள், நீங்கள் உணவை எப்படி வீணாக்கலாம்? என ஆங்கிலத்தில் கேட்டார். அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுறீங்க? எங்களுடைய பணத்தில்தானே வாங்கினோம்? என்றார் என் நண்பர். அதைக் கேட்டதும் மிகுந்த கோபத்துடன் ஒரு பெண்மணி தன் செல்.'. போனில் யாரிடமோ பேச ஆரம்பித்து விட்டார்.

சிறிதுநேரத்தில் சீருடை அணிந்த ஒரு அலுவலர் எங்களிடம் வந்தார். தான் சோஷியல் செக்யூரிட்டி நிறுவனத்திலிருந்து வருவதாகக் கூறினார். உணவை வீணடித்ததற்காக ஐம்பது மார்க் அபராதம் கட்டச் சொன்னார். என் ஜேர்மனிய நண்பன் பலமுறை மன்னிப்பு கேட்டுக் கொண்டதுடன், அபராதத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டான். அவர் போகும் பொழுது எங்களிடம், உங்களுக்கு எவ்வளவு சாப்பிடத் தேவையோ அந்தளவு மட்டும் ஓடர் செய்யுங்கள். பணம் உங்களுடையதாக இருக்கலாம். ஆனால் இயற்கை அன்னை தருகின்ற செல்வங்கள் சமுதாயத்துக்குப் பொதுவானவை. அப்படியிருக்க அதை வீணடிக்காமல் இருப்பது உங்கள் பொறுப்பு. உலகில் எத்தனையோ நாடுகள் உணவுப் பொருள்கள் இல்லாமல் தவிக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்” எனக் கூறினார்.

என் நண்பன், அபராத ரசீதை நகல் எடுத்து எங்களுக்குக் கொடுத்தான். இப்போதும் அதை என் அறையில் ஒட்டி வைத்துள்ளேன். நம்நாட்டில் விதவிதமான பகட்டு விசேஷங்களை நடத்தி, சாப்பாட்டை வீணடிக்கின்றோம். இனி வீடு, விருந்து, ஹோட்டல் என எங்கே உணவருந்தினாலும் இயற்கை வளத்தை வீணடிக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தை என்னுள் விதைத்த இந்த சம்பவத்தை அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள்.

*- பானு பெரியதம்பி, சேலம்.*

## பதிவிரக்கப் பெட்டகம்

குழந்தையாக இருக்கும்போது அல்ஜீரியா மற்றும் பாலஸ்தீன விடுதலைக்காக நான் பிரார்த்தனை செய்வதுண்டு. 1967 ஆம் ஆண்டு எனக்குள் ஒரு பயம் ஏற்பட்டது. அப்படி ஒரு பயத்தை அதுவரை நான் உணர்ந்ததில்லை. ஒருவருக்கு ஏற்படக்கூடிய மோசத்திலும் படுமோசமான ஒரு விஷயம் அது. ஆகாய வெளியில் நீங்கள் ஒரு பலூனுக்குள் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்தப் பலூன் வெடித்துவிட்டால் உங்கள் கதி என்னாவது? நீங்கள் பூமியிலும் இருக்க மாட்டீர்கள். ஆகாயத்திலும் இருக்க மாட்டீர்கள். அப்படி ஒரு பயம்தான் 1967இல் எனக்கு ஏற்பட்டது. அப்போதுதான் நான் ‘க்ரனடா’வை எழுதினேன். அந்த நாவலின் மூலமே நான் அந்த பயத்திலிருந்து வெளியே வர முடிந்தது. கிட்டத்தட்ட மரணத்துக்கும் எழுத்துக்குமான போராட்டமாக இருந்தது அது.

- அரபி நாவலாசிரியர் ரத்வா அஷூர்.

இப்படியே ஓடிக்கொண்டிருந்தால் எப்படி? எழுத்தில் மட்டுமே வாழ்ந்துவிட முடியுமா? என்று சிலர் என்னைக் கேட்டார்கள். என்னுடைய எழுத்து எதார்த்தத்தின் அடிப்படையில் நிற்கிறது. அவமானம், ஆக்கிரமிப்பு, கலகம் என்ற எதார்த்தம். விடுதலைக்காக ஏங்கி - ஆனால் விடுதலையை அடைய முடியாத ஒரு மக்கள் கூட்டத்தின் எதார்த்தம் அது. விடுதலைக்காகத் தங்கள் உயிரையும், இளமையையும் பறிகொடுத்த மக்களின் எதார்த்தம். ஆனால், பிரச்சினையானது உள்ளிருந்தே அழுகிக்கொண்டிருப்பதால் அவர்களின் கனவுகள் நொறுங்கிப் போகின்றன. விடுதலைக்குப் பதிலாக மரணமே அவர்களுக்குப் பரிசாகக் கிடைக்கிறது. இந்த அழிவுக்குப் பிறகு அவர்கள் மீண்டும் கிளர்ந்தெழுந்து மீண்டும் கனவு காணத் துவங்குகிறார்கள். தங்கள் சிறைக் கொட்டடியிலிருந்து வெளியேறும்வரை அவர்களின் கனவு தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

- பலஸ்தீன எழுத்தாளர் ஸஹர் கலி'.ப.

தேசம், மதம், மொழி, இனம் போன்ற பல்வேறு எல்லைக் கோடுகளை நமக்குள் போட்டுவைத்துக் கொண்டு அதனுள்ளேயே இருந்துகொண்டிருப்பதன் மூலம் நாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறோம். ஆனால், உண்மையில் இந்தப் புனித எல்லைக்கோடுகள் யாவும் மனிதகுலத்துக்குத் தீங்கு விளைவிப்பவையாகவே உள்ளன.

சமீர் சொன்னான், எல்லைக்கோடு போடுவதற்கு உனக்குத் தேவையானதெல்லாம் சிப்பாய்கள்தான். அவர்கள் மூலமாகத்தான் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும். மற்றபடி பூமிப்பரப்பில் எந்தவித எல்லைக்கோடுகளும் இல்லை. அதிகாரம் யார் கையில் இருக்கிறதோ அவருடைய மனதில்தான் எல்லைக்கோடு இருக்கிறது.

- மொராக்கோ எழுத்தாளர் ':பாத்திமா மெர்னிஸி.

சிறையை விட்டு வெளியே வந்ததும் எனக்கு இரண்டு வழிகள் இருந்தன. ஆளும் வர்க்கத்தின் எண்ணற்ற அடிமைகளில் ஒருவராக ஆகலாம். அதன்மூலம் பாதுகாப்பும், வசதியும், அரசாங்கப் பரிசுகளும், ‘மாபெரும் எழுத்தாளர்’ என்ற பட்டமும், பதவியும் என்னைத் தேடி வரும். என் புகைப்படங்களைப் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் பார்த்து மகிழலாம். இதற்கு மாறாக, வேறொரு வழியும் இருந்தது. அதன்படி, என் பழைய வழியிலேயே எழுதி இப்படி ஒரு சிறையை வந்தடைவது.... நான் சிறுவயதில் பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்ததிலிருந்தே ஆபத்தான பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறேன். பொய்யை நம்பி வாழும் இந்த உலகில் உண்மையைவிட அதிக ஆபத்தானது வேறு எதுவுமில்லை. ஆதாம் - ஏவாள் காலத்திலிருந்தே அறிவு என்பது பாவமாகக் கருதப்பட்டு வரும் இவ்வுலகில் அறிவைவிட ஆபத்தானது வேறு எதுவுமில்லை....

- எகிப்திய எழுத்தாளர் நவ்வல் அல்-ஸாதவி.

வரலாற்றின் மிகப்பெரிய கொடூரத்தை அனுபவித்த ஒரு இனம், எப்படி அதேவித கொடூரத்தை மற்றொரு மனிதக் கூட்டத்தின் மீது பிரயோகிக்கிறது என்பது ஆச்சரியமான விஷயம்.

- சவூதி எழுத்தாளர் லுப்னா ஹுசேன்.

எழுதுவது என்பது அர்த்தத்தையும், ஒழுங்கையும் வலியுறுத்தும் விதமாக இலக்கியத்தோடு முட்டி மோதிப் போராடுவதாகும். ஒரு தீவிர எழுத்து என்பது முதலில் தன்னைத் தானே கேள்விக்குள்ளாக்கிக் கொள்ள வேண்டும். தன்னைச் சுற்றியுள்ள சமூகச்சூழலை நிர்ணயிக்கும் கலாசாரம் நிறுவும் ஒழுங்கையும் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அப்போதுதான் அதன் புரட்சித்தன்மை வீரியத்துடன் இருக்க முடியும்.

- ரொலான் பார்த்.

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய

## வருடாந்தப் பொங்கல் உற்சவ சிறப்பு மலர் - 13.06.2011

## உற்றதுயர் நீக்க ஓடிவந்து காக்கும் வற்றாப்பளை கண்ணகையம்மனின் பொங்கல் பெருவிழா

புராதன வரலாற்றுச் சிறப்புக்களுடனும், தெய்வீகப் பெருமையுடனும் திகழ்வது வற்றப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயம். வற்றாப்பளைக் கிராமத்தில் நந்திக் கடற்கரையில் கோயில் கொண்டு வன்னி நாட்டிற்கு மட்டுமன்றி ஈழம் முழுவதற்குமே தாய்த் தெய்வமாக அருள்பாலித்து வரும் கண்ணகை அம்மனின் தெய்வீகப் புதுமைகளை சொல்லில் அடக்கிவிட முடியாது.

கண்ணகை வழிபாடு பற்றிய மிகப்பழைய இலக்கியச் சான்றாக எமக்குக் கிடைப்பது சிலப்பதிகாரம். வற்றாப் பளைக் கண்ணகை அம்மன் பூர்வீக வரலாற்றை சிந்திக்கின்ற பொழுது வற்றாப்பளையின் நந்திக் கடற்கரையில் ஆநிரை மேய்த்த சிறுவர்க்கு காட்சி கொடுத்து அவர்களது பொங்கல் மடையை ஏற்று அருள்புரிந்த அற்புதம் பெருமைக்குரியது.


ஆநிரை மேய்த்து நின்ற சிறுவர்கள் முன் ஒரு நரை மூதாட்டி வந்தனள். சிறுவர்கள் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். மூதாட்டியின் பசியை அகற்றப் பாற்பொங்கலிட்டுப் படைத்தனர். அந்தி நேரம் கடந்து இருள் சூழ்ந்ததால் அங்கு தீபம் தேவைப்பட்டது. மூதாட்டி பணித்ததற்கு இணங்க கடல் நீரில் தீபமேற்றினர். அவர்களின் அன்புப்படையலை ஏற்று அருள் சுரந்து தொடர்ந்தும் வைகாசி விசாகம் கூடிய திங்கள் நாளில் பொங்கல் மடை செய்யப் பணித்து மறைந்தனள் அம்மூதாட்டி.

சிலம்பு கூறலில் இச்செய்தியானது சுமார் பத்துப்பாடல்களில் விரித்துரைக்கப்படுகிறது. இவ்வாறு காட்சி கொடுத்து மறையும்போது தனது பெயர் கண்ணகி என்றும், தன் பெயருரைத்தால் "ஆகும் பிணி போகும்" என்றும் திருவாய் மலர்ந்தருளினாள் எனப்படுகின்றது. கண்ணகி காட்சி கொடுத்தது மறைந்த பின் அச்சிறுவர்கள் ஊர்ப் பெரியோரிடம் அவ்வற்புதத்தைக் கூறினர். ஊர்த்தலைவனும் ஊரவரும் நந்திக் கடற்கரையில் பொங்கல் மரபைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

"அந்திப் பொழுதினிலே நந்திக் கடற்கரையில்
ஆலயந்தனிலே பொங்கல் மடை செய்வோம்
பொங்கல் மடைசெய்தே திருவிளக்கேற்றிடப்
பொன்னின் குடக்கும்ப மீதி லுறைந்தாள்"

என்னும் வாய்மொழிப் பாடல் வழக்கிலுள்ளது. வற்றாப்பளை நந்திக் கடற்கரையில் அம்மன் காட்சி கொடுத்த இடத்தில் வேப்ப மரத்தின் கீழ் பொங்கலிட்டு வந்தவர்கள் இப் பொங்கலுக்கு முன்னோடியான சில வழிபாட்டு நிகழ்ச்சிகளை முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயத்தில் விநாயகப் பெருமானுடைய அருளுடன் தொடக்கி வைத்தனர்.

வற்றாப்பளைப் பொங்கலுக்கு முதல் ஏழுநாள் மடைகளும் பொங்கலும் காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வருகின்ற மரபும் இருந்து வருகின்றது. கண்ணகை வழிபாட்டு மரபில் சிலம்பு, பிரம்பு, அம்மானை, உடுக்கு முதலிய புனித சின்னங்களும் "முகபாடம்" எனப்படும் வெள்ளியாலமைந்த முக அமைப்பும், சித்திரச் சேலைகளும் இடம்பெறத் தொடங்கின. தமிழ் நாட்டிலிருந்து வந்த கண்ணகை பக்தனான "பத்தஞானி" என்பவர் இப்புனிதப் பொருட்களைக் கொணர்ந்து கண்ணகை அம்மன் வழிபாட்டில் இவற்றை இடம்பெறச் செய்தார் என்பர். கும்பத்தில் வெள்ளிமுக அமைப்பைப் பொருத்தி வெள்ளியிலான கை, கால் முதலியவற்றை முறைப்படி அமைத்து கண்ணகை அம்மனது திருவடிவம் அமைக்கப்படும். சிலம்பு, அம்மானை, பிரம்பு, உடுக்கு என்பன பூஜையிலே வைக்கப்படும், பக்தஞானி கொணர்ந்து இப்புனிதச் சின்னங்களை அம்மனுக்குப் பூசை புரியும் பிராமணர்கள் தங்களது பாதுகாப்பில் முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயத்துக்கருகில் தாம் வாழ்ந்த இல்லத்தில் வைத்துப் பூசித்து வந்தனர்.



தற்பொழுது சுமார் நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பழமையாய் இருந்த ஆலயம் இடிக்கப்பட்டு புதிய ஆலயம் தூபியுடன் அமைக்கப்பட்ட சிறப்பினைக் காணலாம்.

ஈழத்தில் கண்ணகை அம்மன் கோயில் கொண்ட தலங்கள் பல குறிப்பிடப்படுகின்றன. வற்றாப் பளை என்பது பத்தாவதாகக் கண்ணகை அம்மன் வந்து அமர்ந்த இடம் எனவும் அது பத்தாம் பளை என வழங்கியதெனலாம். காலப் போக்கில் மருவி வற்றாப்பளை ஆயிற்றென்றும் செவி வழிச் செய்தியுண்டு. பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் பண்பு தமிழ் மக்கள் மத்தியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே நிலவி வந்துள்ளது.

### பொங்கல் வழிபாடு

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடாவருடம் வைகாசித் திங்களில் பொங்கலிட்டு வழிபாடாற்றும் நிகழ்வுகளுடன் ஒட்டி அதன் முதல் நாள் இவ்வாலயத்திலிருந்து மூன்றரைக் கல் தொலைவில் அமைந்த முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் பொங்கல் முறைகளையும் அதற்கு முந்திய பிந்திய நாட்களில் நடைபெறும் கருமங்களையும் அதாவது "பாக்குத் தெண்டல்" என்ற கருமத்திலிருந்து "பக்த ஞானியர்'' பொங்கல் வரை பத்தொன்பது நாட்களுள்ளும் அடங்கிய பொங்கலோடு சம்பந்தமுடைய வழக்க முறைகளாகும்.

உபகரிப்புக்காரர்களிடம் மங்கலப் பொருட்களான மஞ்சள், பாக்கு, வெற்றிலை என்பனவற்றைப் பெறுதலையே பாக்குத் தெண்டல் எனக்கூறுவர்.

தீர்த்தமெடுத்தல் என்பது பாக்குத் தெண்டிய நாளுக்குப் பின்னும் பொங்கலுக்கு முன்னுமாகிய எட்டாம் நாள் திங்கட்கிழமை கண்ணகையின் அழியாத அற்புதத்தை உலகில் வேறெங்கும் நடைபெற்று வராத மகிமை நிறைந்த செயலை மக்களுக்கு உணர்த்தி வருவதான தீர்த்தமெடுத்தல் வைபவம் சிறப்பாக நடைபெறும்.

மிக அற்புதமான வைபவம் என்பது உப்பு நீரில் ஒப்பரிய அற்புத விளக்கை எரிக்கும் நிகழ்வுச் சுவடு ஏற்றப்படும். அற்புத விளக்கில் நீரில் நனைத்த திரி எவ்வளவு பிரகாசமாக சுடர்விட்டு எரியும் காட்சி அற்புதக் காட்சியாகும். இத்தகைய அற்புத வரலாற்றுச் சிறப்புகளோடு விளங்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று பொங்கல் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். ஈழத்திருநாட்டில் அனேக மானவர்கள் ஆண்டுதோறும் கலந்துகொள்ளும் தெய்வீக நிகழ்வாக அமைந்து வருகின்றது.

**வாழ்வுக்கு வழி காட்டும் வற்றாப்பளையாளை**
**வாயாரப் போற்றி வழிபட்டு வாழ்வோமாக.**

**வர்ணனைக் கலாநிதி, மதுகரகவி, காரை. எம். பி. அருளானந்தன், பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம், யாழ்ப்பாணம்.**

## நின் சேவடிகள் தொழுகின்றோம்; நிதமுன்னைச் சேவிப்போம்!

நந்திக்கட லோரமதில் நமையாளும் உமையவளே; என்றும்
நலிந்தவர்க் கருள்புரிவாய் கருணைவடி வாம்பிகையே; போரால்
வெந்துளமழு வோரினது வேண்டுதலை ஏற்றிடுவாய்; தூய
வெண்ணீறு தரித்தவளே விழிதிறந்து பார்த்திடுவாய்; உதிர
சொந்தமதை யிழந்தவர்கள் சோகமதைச சுமப்பவர்கள்; வாழ்வு
சோபிக்க அருள்புரிவாய் கண்ணகையே தாயே நீ; தொடர்
அந்தமுமே ஆதியுமாய் இவ்வகிலத்தை ஆழ்பவளே; உன்
அடியாரைக் காத்திடுவாய் அடைக்கடலமே சரணமம்மா.

குங்குமத்தைத் தரித்தவளாய் கொடுபிணிகள் நீக்கிடுவாய்; மிகு
கொடியவர்கள் தீஞ்செயலின் நியாயத்தை வழங்கிடுவாய்; எழில்
பொங்குகின்ற புன்னகையில் புதுமைகள் செய்பவளே; இப்
பூவுலகம் தனைத்தாங்கி பொறுமையதைக் காப்பவளே; எழும்
சங்கொலிகள், உடுக்கோசை, பறையடிகள் பலவற்றில்; பேய்கள்
சதிராட வைப்பவளே! சங்கரித்துச் சாய்ப்பவளே; உதய
செங்கதிரோன் திசைபார்க்கும் கண்ணகையே கருமாரி; நின்
சேவடிகள் தொழுகின்றோம் நிதமுன்னைச் சேவிப்போம்.

திங்களது ஒருநாளில் தேடிவரும் அடியவரின்; தேவைகளைத்
தீர்த்திடுவாய்! தீபஒளி ஏற்றிவைப்பாய்; தினம்
பங்கங்கள் ஏதுமில்லா பரிவுடனே காத்திடுவாய்; அருள்
பாசமுடன் நோக்கிடுவாய் பசி, பிணி நீக்கிடுவாய்; உயர்
சிங்கமது வாகனத்தில் சிங்கார வீதியுலா; ஊர்
சேர்ந்திடுமே! பார்த்திடுமே! சிந்தனைகள் விரிந்திடுமே; அதி
ஓங்கார சொரூபவதி 'ஓம் சக்தி' கண்ணகையே! உனக்கு
ஒரு கோடி தோத்திரங்கள் உளமார ஏற்றிடம்மா!

-அலெக்ஸ்பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.


(L) கிருபா லேணர்ஸ் (L)
தற்போது
கிளிநொச்சியில்
முன்னணிப்
பயிற்றுவிப்பாளர்கள்.
ஐயனார் வீதி (கச்சேரி அருகில்), கிளிநொச்சி.
தொ.பே: 021 228 5505,
077 7238600
(C/779)

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
எல்லாவிதமான
பலசரக்குப்
பொருட்களையும்
பெற்றிடலாம்.
ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
(C/775)

சரவணா ரெக்ஸ்
526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
(சிவன் கோயிலுக்கு
அருகாமை),
யாழ்ப்பாணம்.
770, 772, கே.கே.எஸ்.
வீதி, தட்டெதெருச்
சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0421
(C/776)

குமரகுரு மல்ரி சொப்
Kumara Kuru multi shop
வைகாசித்
திருவிழா மலிவு
விற்பனை.
குமரகுரு மல்ரி சொப்
பிரதான வைத்தியசாலை
முன்பாக, ஏ-9 வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
(C/777)

மணி ஐயப்பா நகைப் பூங்கா
தனது சேவையினை
மீண்டும்
கிளிநொச்சியில்
08.06.2011 முதல்
மீண்டும்
ஆரம்பித்துள்ளது.
கந்தசாமி கோயில்
முன்பாக,
ஏ-9 வீதி, கிளிநொச்சி.
(C/774)

# புதுமுறிப்பு பாலத்துக்கு அடிக்கல்; சந்திரகுமார் எம்.பி. நாட்டினார்



(கிளிநொச்சி)

இருபது இலட்சம் ரூபா செலவில் புதுமுறிப்பு பாலம் அமைக்கும் பணியினை நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற பிரதிகுழுக்களின் தலைவருமான மு.சந்திரகுமார் அடிக்கல்லினை நாட்டி வைத்து ஆரம்பித்து வைத்தார்.


கடந்தகாலங்களில் முற்றாக சேதமடைந்து போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு பெரும் அசௌகரியங்களை சந்தித்து வந்த நிலைமையினை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தமையினையடுத்து வீதி அபிவிருத்தி திணைகளத்துடன் இணைந்து அவர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக இருபது இலட்சம் ரூபா செலவில் இப் பாலம் அமைக்கப்படுகிறது.

இதேவேளை மேலும் ஒரு பாலமும் நிரந்தரமாக அமைக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அத்தோடு கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கோணாவில் வரைக்கும் வீதி முதற்கட்டம் நிரந்தரமாக புனரமைக்கும் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படுவதோடு அதே காலப்பகுதியில் அடுத்தகட்ட பணியாக கோணாவில் தொடக்கம் ஸ்கந்தபுரம் வரைக்குமான வீதி புனரமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்படும் என இதன் போது நாடாளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பெருபாலான அபிவிருத்திப்பணிகள் தாமதமாவதற்கு ஒப்பந்தகாரர்களின் தாமதமும் ஒரு காரணம் எனத் தெரிவித்த அவர் மீள்குடியேறியுள்ள இம் மாவட்டத்தின் விரைவான அபிவிருத்திக்கு ஒப்பந்தகாரர்களின் பூரண ஒத்துழைப்பு மிக மிக அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பிரதேச இராணுவ அதிகாரிகள், மக்கள் அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் குருதிக்கொடை



(மட்டக்களப்பு)

சர்வதேச குருதி நன்கொடையாளர்கள் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு இரத்த வங்கிப்பிரிவு ஏற்பாடு செய்த குருதிக் கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்டத்தினைச் சேர்ந்த பலர் குருதியினை நன்கொடை செய்தனர். இதில் இராணுவத்தினர், பொலிஸார், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தொண்டர்கள் எனப் பலரும் இணைந்து குருதி வழங்கினர்.

## மதுபான சாலைகள் திறக்கப்பட மாட்டாது

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்றுமுதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபான சாலைகளையும் மூடுமாறு சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் திஸ்ஸமகாராம பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மதுபான சாலைகள் ஜூன் 14 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் பொசன் பௌர்ணமி தினத்தன்று மூடப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நூல் வெளியீடு

(மட்டக்களப்பு)

சொற் சிற்பி இ.சபா அவர்கள் எழுதிய 'சுடுகாட்டு ரோஜா' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனியன்று மட்/செட்டிபாளையம் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

செட்டிபாளையம் லெட்சியம் வெளியீட்டகத்தின் திட்டமிடல் ஆலோசகர் சி.நிதிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ். தர்மகுணசேகரம், மட்/செட்டிபாளையம் மகாவித்தியாலய அதிபர் அருள்ராசா. மற்றும் இலக்கியவாதிகள் பொதுமக்கள் கவியார்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மறைந்த தொண்டர்களுக்கு பொதுமக்கள் அஞ்சலி

கடந்த 2007.06.01 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு தொண்டர்களின் நான்காவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு கடந்த 11.06.2011 அன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் நடைபெற்றது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் த.வசந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மறைந்த தொண்டர்களின் பெற்றோர் உறவினர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மறைந்த தொண்டர்களின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அவர்களின் கடந்த கால சமூகப்பணி பற்றி நினைவுரைகளும் இடம்பெற்றன.

## ஆற்றோரம் பெண்ணின் சடலம்

(கொழும்பு)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஸ்காப்ரோ கொழும்பு தோட்டத்தின் ஆற்றோரப் பகுதியிலிருந்து இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறிப்பிட்ட ஆற்றோரப் பகுதிக்குத் தொழிலுக்கு சென்ற தொழிலாளர்கள், கரை யொதுங்கிய நிலையில் காணப்பட்ட சடலம் குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் தெரிவித்துள்ளனர்.

## கடலில் மூழ்கி இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வாழைச்சேனையைச் சேர்ந்த மீராலெப்பை நாஸர் எனும் 21 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த நிலையில் இவர் நீரில் மூழ்கி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

## ஊர். சூரியாவத்தை கிராமம் ஒளி பெறுவது எப்போது?

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேசத்திலுள்ள சூரியாவத்தை கிராமத்திற்கு கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப் பின் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால், தாம் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வது பெரும் சிரமமாக உள்ளதாகவும் குறிப்பாக மாணவர்கள் இரவு வேளைகளில் சிரமத்தின் மத்தியில் கல்வியைக் கற்பதாகவும் அப்பிரதேச மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல முறை கோரிக்கை விடுத்தும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (27)

## இராஜதந்திர சேவையில் இனி வர்த்தகர்களுக்கும் இடம்



இலங்கையின் கடல் கடந்த இராஜதந்திர சேவையில் வர்த்தகர்களும், அரசியல்வாதிகளும் எதிர்காலத்தில் இணைக்கப்படவுள்ளனர் என்று பிரதி வெளியுறவு அமைச்சர் நியூமல் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டு சேவையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாகவே மேற்படி ஏற்பாடு செய்யப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 13 ஆவது அரசியல் அமைப்பை சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் நியூமல் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டின் எதிர்கால நலன்கருதி செயற்படவுள்ளதாகவும் நியூமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளியுறவு சேவையில் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொண்ட அவர், இதனை நிவர்த்திக்கும் வகையில் வெளிநாட்டு சேவையில் முக்கிய அரசியல்வாதிகளும் வர்த்தகர்களும் இணைக்கப்படவுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

இந்தியாவில் வைத்து, வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், 13 ஆவது அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவித்தமை குறித்து கருத்துரைத்த நியூமல் பெரேரா, ஜீ.எல்.பீரிஸ் இணக்கம் வெளியிட்ட 13 ஆவது திருத்தத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அடங்கியிருக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

### ஜனாதிபதி மகிந்த....

மகிந்த ராஜபக்ஷ, அதன் போது ஐ.நா. நிபுணர்குழு வெளியிட்ட போர்க் குற்ற அறிக்கை விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளித்தமைக்காக நன்றிகளையும் தெரிவிக்கவுள்ளார்.


இதனைத்தொடர்ந்து சென். பீற்றர்ஸ்போர்கில் நடைபெறவிருக்கும் சர்வதேச பொருளாதார மநாட்டிலும் பங்குகொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உலகத் தலைவர்கள் பலருடனும் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார். ஜூன் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் இந்த மாநாடு நடைபெறவிருக்கின்றது. இதில் சீன ஜனாதிபதி ஹு ஸின்டவோவும் பங்குகொள்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### விடைத்தாள் திருத்தும்....

தீர்வும் கிடைக்கவில்லை. அதனால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதிலிருந்து விலகுவதன் மூலம் எமது தொழிற் சங்க நடவடிக்கையை வலிமையாக்கத் தீர்மானித்தோம் என அவர் கூறினார்.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்கவிடம் கேட்டபோது, பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்படி தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வர் என நம்புவதைத் தவிர எதுவும் கூறுவதற்கில்லை என பதிலளித்தார்.

செப்டெம்பர் மாதம் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கும் எனவும் அதனால் பல்கலைக்கழக ஆசிரியர் தமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டு விடைத்தாள்கள் திருத்தும் பணியில் பங்குபற்றுவர் என நம்புகிறோம் என அவர் கூறினார்.



# லிபியாவில் சமரச முயற்சி மத்தியஸ்தர் ஆகிறார் ஹக்கீம்



(கொழும்பு)


லிபிய நெருக்கடியைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி கேணல் முஅம்மர் கடாபியுடனும், கிழக்கு லிபிய கிளர்ச்சியாளர்களுடனும் பேச்சு நடத்தி அங்கு அமைதியை ஏற்படுத்த முன்வருமாறு ரவூப் ஹக்கீமிடம் அவரைச் சந்தித்த லிபியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கத்தின் இலங்கை பிரதிநிதி தரிக் அலீ வேண்டுகோள் விடுத்தார். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள தமது நாடு தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி கடாபிக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி லிபியாவில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான பேச்சில் மத்தியஸ்தம் வகிப்பதைப் பொறுத்தவரை அதற்குத் தாம் தயாரென்றும், ஆனால் தற்போதைய உலகளாவிய அரசியல் சூழ்நிலையில் அதற்கான வாய்ப்பு ஏற்படுவது சாத்தியமாகுமென தாம் நம்பவில்லையென்றும், அந்த விடயத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாமென்றும் அமைச்சர் ஹக்கீம் பதிலளித்தார்.

லிபியத் தலைவர் கடாபிக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் உக்கிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கத்தின் இலங்கைப் பிரதிநிதி தரிக் அலீ நேற்று முன்தினம் பிற்பகல் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

லிபியாவில் ஏற்பட்டுள்ளதை போன்ற ஒருவிதமான வெளிநாட்டுத் தலையீடு இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால், இங்கு இராணுவ தலையீடாக அன்றி, அது இராஜதந்திர தலையீடாகவே காணப்படுவதாகவும் லிபியப் பிரதிநிதியிடம் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

# பிரதமர் மன்மோகன் சிங்கை ஜெயலலிதா விரைவில் சந்திப்பார்





(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழக முதல்வரும், அ.தி.மு.க. தலைவியுமான ஜெ.ஜெயலலிதா விரைவில் சந்திக்கவுள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரம் மற்றும் தமிழகத்தில் தான் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அவர் இந்தியப் பிரதமருடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க. வுக்கும் இடையிலான 7 வருட கால உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள சூழலில் இச்சந்திப்பு இடம் பெறுகின்றது.

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வென்றவுடன் அவருக்கு காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

அதனால், இவ்விரு கட்சிகளும் மீண்டும் நெருக்கமாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இம்முறை தனது டில்லி விஜயத்தின்போது சோனியா காந்தியை ஜெயலலிதா சந்திப்பாரா என்பது தெரியவில்லை.

# இசை நிகழ்வில் ஏற்பட்டது குழப்பம் பொலிஸார் உட்பட அறுவர் காயம்

(வவுனியா)

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட பார்வையாளர்கள் ஆறு பேர் காயமடைந் துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இசை நிகழ்ச்சி ஆரம்பித்து அரை மணி நேரத்தில் நிறைவுற்ற போது குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு பத்து மணிக்கு மேல் இசை நிகழ்ச்சி நடத்த அனுமதி பெறப்படாததினால், நிகழ்ச்சியை இடைநிறுத்தம் செய்ய வேண்டிய நிலையேற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மேடையிலிருந்த பாடகர்களை நோக்கி தாக்குதல் இடம்பெற்றது. ஒலிபெருக்கி கருவிகளுக்கும் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. நிகழ்ச்சியை பார்வையிட வந்த இளைஞர்களில் அதிகமானவர்கள் மது போதையில் காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (33)

## இசை நாடகப் போட்டியில் கிளி.மகா வித்தியாலயம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடாத்தப்பட்ட தமிழ் மொழித் தின இசைநாடகப் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மன்னார் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையில் நாடத்தப்பட்ட இசை நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைக் கிளிநொச்சி மகா வித்தியாலயம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இந்தப் போட்டியில் தெரிவாகிய நாடகம் ஹரிச்சந்திர மயான காண்டம் என்ற புராண இசை நாடகமாகும்.

# இத்தாலியில் வேலைவாய்ப்பு அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு இத்தாலி இஸ்ரேல் ஆகிய நாடுகளில் கணிசமான வேலை வாய்ப்புக்களை எதிர்காலத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா இதற்கான பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

பேச்சுக்களில் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

2014 ஆம் ஆண்டளவில் இவ் ஒப்பந்தங்களின் பயனை அனுபவிக்க முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்க தலைவர்களுக்கு ஆயுததாரிகள் கொலை மிரட்டல்

## ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கம் கூறுகிறது

(கொழும்பு)

ஆயுதம் வைத்திருக்கும் சிலர், தொழிற்சங்க தலைவர்களை, சங்கங்களிலிருந்து விலகும்படி மிரட்டி வருவதாக மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான அனைத்து கம்பனி ஊழியர் சங்கம் நேற்றுக் கூறியது. ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய சாதாரண ஊழியர்களை குற்றப்புலனாய்வு பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் அச்சங்கம் கூறி யது. இவ்வாறான அடக்கு முறைகளை கைவிடும்படியும் தொழிற்சங்கத் தலைவர்களை மிரட்டுவோரை சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் அரசாங்கத்திடம் மேற்படி சங்கம் வலியுறுத்தியுள்ளது. சில ஆயுததாரிகள் தொழிற் சங்கத் தலைவர்களின் வீடுக ளுக்குச் சென்று அவர்களின் தொழிற் சங்கங்களிலிருந்து விலகிவிடுமாறு மிரட்டியுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். அதே நேரம், கூட்டுத் தொழிற்சங்கங்க ளின் ஒன்றியம், வர்த்தக வலய ஊழியர்கள் சாதாரணமான முறையில் விசாரிக்கப்பட்டாலும் அவர்களுக்கு கொலைப் பய முறுத்தல் விடப்படவில்லை என்று கூறியுள்ளது.

# ஊடகவியலாளர் கொலை இலங்கைக்கு நான்காம் இடம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் கொலை தொடர்பில் தீர்வு காணப்படாத வழக்குகள் பட்டியலில் இலங்கைக்கு 4ஆம் இடம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் கண்காணிப்புக் குழு ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் மற்றும் அது தொடர்பான விசாரணைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

13 நாடுகளில் 5 வழக்குகளுக்கு உட்பட்டு காணப்படுவதாகவும் இலங்கையில் 9 வழக்குகள் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் இலங்கை நான்காம் இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஈராக் முதலிடம் வகிக்கிறது. அங்கு சுமார் 92 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகனங்களைப் பெற்றுக்கொள்ளவும்

(கிளிநொச்சி)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது பொது மக்களினால் கைவிடப்பட்ட வாகனங்களின் ஒரு தொகுதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவற்றை மக்கள் பார்வையிட்டு அவை தங்களுடையதென உறுதிப்படுத்திய பின் பெற்றுக்கொள்ளலாம் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

வாகனங்களின் உரிமையாளர்கள் ஆவணங்களைக் கொண்டு வந்து தமது வாகனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமும் சிலர் தமது வாகனங்களை அடையாளப்படுத்தி பெற்றுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீளாய்வு நடவடிக்கை

(கரணவாய்)

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் தங்களின் 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையைச் சமாச செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

அனைத்து சனசமூக நிலையங்களின் அறிக்கைகள் கிடைத்ததும் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்படவிருப்பதாக சமாசத்தினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# இராணுவ அதிகாரி பலி; தம்புள்ளையில் விபரீதம்

(கொழும்பு)

தம்புள்ளை பன்னம்பிட்டிய என்னுமிடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் தேசிய இராணுவ கடேட பிரிவு 13 ஆவது அணியின் கட்டளையிடும் அதிகாரியாக செயற்பட்ட லெப். கேணல் எம்.டி.எம். லெனதோ என்ற இராணுவ வீரரே உயிரிழந்துள்ளார்.

ரன்தெம்பே இராணுவ முகாமில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கும் பயிற்றுநராக பணியாற்றிய இவர் பயிற்சிகளை நிறைவு செய்து விட்டு வீடு திரும்பும்போது மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

## பாடசாலை தினம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பாடசாலை தினம் இன்று கல்லூரி அதிபர் அருட்திரு சிங்கராயர் அடிகளார் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், இத்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டம் மற்றும் நீச்சல் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (27)

# திண்மக்கழிவு அகற்றல் வடமராட்சியில் மந்தம்

(கரணவாய்)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அம்சமாக இடம்பெற்று வந்த வீடுகளில் சேரும் கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது அங்கு இடம்பெறுவதில்லை என வடமராட்சி தெற்கு மேற்கு சனசமூகநிலையங்களின் சமாசத்தினால் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை நிமிர்த்தம் வீடுகளில் சேரும் கழிவுப்பொருட்களை வீட்டு உரிமையாளர்கள் உரப்பையில் இட்டு வைத்தால் அவற்றைப் பிரதேச சபையின் வாகனங்கள் எடுத்துச்செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பிரதேசத்திலுள்ள சந்திப்பகுதிகளில் கழிவுப் பொருட்கள் நிரப்பப்பட்ட உரப்பைகள் நீண்டநாட்களாகத் தேங்கிக் காணப்படுவதாகவும் இவற்றைக் கட்டாக்காலி நாய்கள் மற்றும காகங்கள் என்பன அவற்றை கிளறி வீதிகளில் போடுவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.